வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 05 | 12.01.2024 வெள்ளிக்கிழமை | இதழ் : 12 | பக்கங்கள் : 12



மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433

076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்

WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## கிழக்கில் தொடரும் மழை:

# 42 ஆயிரத்துக்கும் அதிக குடும்பங்கள் பாதிப்பு!

மட்டக்களப்பு, ஜன. 12

கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழையால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மட்டும் 42 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்த ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 16 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல குளங்களும் வான் பாய்ந்து வருகின்றன. எனினும், மழை தொடர்வதால் வெள்ளப்பாதிப்பு மேலும் அதி கரிக்கலாம் என்றும்

11

# சர்வதேச பாதுகாப்பை உறுதிப்படுத்தும் கடற்படை இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த தயங்குகிறது

## யாழ்.மீனவ அமைப்புக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 12

சர்வதேச பாதுகாப்பிற்காக செங்கடல் நோக்கிப் பயணிக்கும் கடற்படை கப்பல்கள் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துவதற்கு ஏன் தயங்குகின்றன என யாழ். மாவட்ட கிராமிய மீனவர் அமைப்புக்களின் தலைவர் செல்லத்துரை நற்குணம் கேள்வி எழுப்பியுள்ளார்.

வடமராட்சியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் இந்திய

11

# தமிழரசு கட்சிக்கு தலைவர் தேர்தல் மூலமே தெரிவாவார்

## 3 போட்டியாளர்களின் நேற்றைய சந்திப்பு இணக்கமின்றி முடிந்தது!

கொழும்பு, ஜனவரி 12

**இலங்கை தமிழரசு கட்சியின் தலைவரை தேர்தல் மூலமே தெரிவு செய்வது என்ற முடிவை அந்தப் பதவிக்கு போட்டியிடும் மூன்று போட்டியாளர்களும் எடுத்துள்ளனர்.**

நேற்றைய தினம் தலைமை பதவிக்கு போட்டியிடும் சி. சிறீதரன், ம. ஆ. சுமந்திரன், சீ. யோகேஸ்வரன் ஆகியோர் கொழும்பில் உள்ள சிறீதரன் எம். பியின் இல்லத்தில் சந்தித்துப் பேசினர். இதன்போதே அவர்கள் இந்த முடிவை எடுத்தனர்.

நேற்று முன்தினம் சம்பந்தனின் இல்லத்தில் நடந்த செயல்குழு கூட்டத்தில் கட்சியின் தலைவர் தெரிவு பாரம்பரிய முறைப்படி தேர்தலின்றி நடைபெற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. எனவே, இது தொடர்பில் மூவரும் கூடிப் பேசி முடிவு எடுப்பதாகவும் - அதற்கு ஒருநாள் அவகாசம் தருமாறும் போட்டியாளர்களில் ஒருவரான சுமந்திரன் எம். பி. செயல்குழுவிடம் கூறியிருந்தார்.

இதன்பிரகாரம், தலைமைக்கு போட்டியிடும் மூவரும் சிறீதரன் எம். பியின் கொழும்பு இல்லத்தில் நேற்று வியாழக் கிழமை கூடினர். இதன் போது, சிறீ தரன், சுமந்திரன்

11

# அம்புலன்ஸ் படகு தாமதம்: பறிபோனது இளைஞர் உயிர்!

யாழ்ப்பாணம், ஜன. 12

விபத்தில் காயமடைந்த இளைஞரை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கு அம்புலன்ஸ் படகு வரத் தாமதமானதால் அவரின் உயிர் பறிபோனது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை அனலைதீவில் இடம்பெற்றுள்ளது. இதில், அதே இடத்தை சேர்ந்த தர்சன் (வயது 23) என்ற இளைஞரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த இளைஞர், புளியந்தீவில் இருந்து டிராக்டரை தனியாக செலுத்தி வந்துள்ளார்.

11

# கிடப்பில் போடப்பட்ட குருந்தூர்மலை வழக்கு

## சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக காத்திருப்பு

முல்லைத்தீவு, ஜன. 12

சட்டமா அதிபரின் ஆலோசனை பெறும் வரை குருந்தூர்மலை வழக்கு கிடப்பில் போடப்பட்டுள்ளதாக சட்டத்தரணி எஸ். தனஞ்சயன் தெரிவித்தார்.

குருந்தூர் மலையில் பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதாக கூறப்பட்ட வழக்கானது முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நேற்று எடுத்து கொள்ளப்பட்டது.

11



# வெள்ளத்தில் மூழ்கிய தென்கிழக்கு பல்கலை

அம்பாறை, ஜன. 12

நிலவிவரும் மழையுடனான காலநிலை காரணமாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகம் நீரில் மூழ்கியுள்ளது. இந்நிலையில் எதிர்காலத்தில் வெள்ள நீர் மேலும் அதிகரிக்கும் அபாயம்

11

# சீரற்ற வானிலையால் இருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 12

ஊவா, மத்திய, சப்ரகமுவ, கிழக்கு, தெற்கு, வடக்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களின் பல பகுதிகளில் தொடர்ந்தும் பலத்த மழை பெய்து வருகின்றது.


சீரற்ற வானிலையால் 7 மாகாணங்களில் 33,687 குடும் பங்களைச் சேர்ந்த 109,635 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்தம் காரணமாக இருவர் உயிரிழந்துள்ளதாகவும், 1,587 குடும்பங்களைச் சேர்ந்த 4,981 பேர் இடம் பெயர்ந்து முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

11

# இளவரசியின் வருகையால் யாழ். பொது நூலகம் பூட்டு

## பாதுகாப்பு ஏற்பாடுகளும் தீவிரம்



யாழ்ப்பாணம், ஜன. 12

பிரித்தானிய இளவரசி ஆன் மற்றும் அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் ஆகியோரின் யாழ்.வருகையால் நேற்று வியாக்கிழமை யாழ்.பொது நூலகம் சுமார் மூன்றரை மணி நேரம் பூட்டப்பட்டிருந்தது.

யாழ்.பொது நூலக பிரதான வாயிலில் ‘விசேட காரணத்தினால் காலை 10.30 மணிக்கு

11

# சுற்றுலாக் கப்பலில் விருந்துபசாரம்; பாராளுமன்றத்தில் பெரும் சர்ச்சை

கொழும்பு, ஜன. 12

இலங்கை துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான இரண்டு படகுகளில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், விருந்துபசாரத்தில் ஈடுபட்டது தொடர்பாக

11

# பிரதான கடத்தல்காரர்களை உடனே கைது செய்யுங்கள்!

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, ஜன. 12

நாடளாவிய ரீதியில் நடைபெற்றுவரும் யுக்திய சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையில்,பிரதான கடத்தல்காரர்களை கைது செய்து உண்மையான போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

11

## இப்படியும் நடக்கிறது

தமிழரசு கட்சிக்கான வரலாற்றில் முதல் தடவையாக தேர்தல் ஒன்றின் மூலம் தலைவர் தெரிந்தெடுக்கப்படவிருக்கிறார்.

கட்சியின் பெருந்தலைவர் சம்பந்தன் ஐயாவின் இல்லத்தில் நடைபெற்ற அரசியல்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருமே கட்சியின் பாரம்பரியத்தைத் தொடர வலியுறுத்தி, தேர்தல் இல்லாமல் ஒருவர் தெரிவு செய்யப்படவேண்டும் என்று விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து, அந்தப் பதவிக்காக முன்மொழியப்பட்டுள்ள மூவரும் மறுநாள் ஒன்றாகக்கூடி பேசி ஒரு முடிவுக்கு வருவது என்று முடிவெடுத்திருந்தனர்.

இந்த யோசனையை கூட்டத்தில் வைத்து அதற்கு முற்றுப்புள்ளி வைத்தவர் நமது சுமந்திரன்தான். அவரே ஒருநாள் அவகாசம் தருமாறும் தாங்கள் மூவரும் கூடிபேசி ஒரு முடிவுக்கு வருகிறோம் எனவும் அந்தக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

அதன் பின்னரே சிறீதரனின் கொழும்பு இல்லத்தில் நேற்று மூன்று வேட்பாளர்களும் சந்தித்தனர்.

ஆனால், அந்தச் சந்திப்பில் எந்தவித இணக்கமும் ஏற்படாமல் தேர்தலை எதிர்கொள்வது என்று முடிவெடுக்கப்பட்டிருக்கின்றது.

இது ஏற்கனவே தெரிந்த ஒன்றுதான். மூவர் களத்தில் நிற்கின்றனர் என்றாலும் உண்மையான போட்டி இருவருக்கு இடையில்தான். ஏற்கனவே, ஒரு போட்டியாளரான யோகேஸ்வரன் தனது ஆதரவை சிறீதரனுக்கு வழங்கிவிட்ட நிலையில், இனி களத்தில் சிறீதரனும் சுமந்திரனுமே இருக்கின்றனர்.

நேற்று இந்த மூன்று வேட்பாளர்களும் சந்திப்பது என்ற முடிவே கட்சியின் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதா அல்லது கட்சியின் யாப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதுபோல, ஒரு பதவிக்காக ஒரு பெயருக்கு மேல் முன்மொழியப்பட்டால் அதனை கட்சியின் பொதுச்சபை உறுப்பினர்களிடையேயான வாக்கெடுப்பு மூலம் தெரிவுசெய்யப்படுவதா என்பதற்கே.

கட்சியின் யாப்பு, சட்டம் என்பது மூளையும் அறிவும் போன்றது. ஆனால், கட்சியின் பாரம்பரியம் அல்லது மரபு, விசுவாசம் என்பது இதயமும் உணர்வும் போன்றது.

நேற்றைய சந்திப்பு மிகக்குறுகிய நேரமே இடம்பெற்றது, அந்தச் சந்திப்பில் "தேர்தலை எதிர்கொள்வோம்", என்று முதலில் தனது முடிவை சுமந்திரனே அறிவித்தாரென்றும் அப்படி தேர்தல் நடைபெற வேண்டும் என்றால் அதனை எதிர்கொள்ள தானும் தயாராகவே இருக்கிறார் என்று சிறீதரனும் அறிவிக்க கூட்டம் சுமுகமாக முடிவடைந்திருக்கின்றது. இருவரும் விடைபெற்றபோது தேர்தல் களத்தில் சந்திப்போம் என்று விடை பெற்றிருக்கின்றனர்.

முன்னதாக, சம்பந்தன் வீட்டில் நடந்த அரசியல்குழுக் கூட்டத்தில் கட்சியின் பாரம்பரியத்தை பாதுகாக்கவேண்டும் என்ற அனைவரின் கோரிக்கையையும் தேர்தலில் சந்திப்போம் என்று முதலில் முடிவெடுத்தவர் கண்டுகொள்ளவில்லை என்பது தெரிகின்றது.

முன்னதாக இந்தக் கூட்டம் எப்படி முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்று கட்சியின் முக்கிய தலைவர் ஒருவரிடம் கேட்டிருந்தபோது, "பிரச்னை இருவருக்கு இடையில்தான் என்பதால் இந்த இருவரும் இல்லாமல் வேறு ஒருவரை முன்மொழிந்தால், இரண்டு பேருமே போட்டியிலிருந்து விலகி வேறு ஒருவர் தெரிவாக வழிபிறக்கும் அல்லவா?" என்று அவரிடம் கேட்டபோது அவர் சொன்னார்,

"இருவருமே தாங்கள்தான் வரவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருப்பதால் அதற்கு சந்தர்ப்பம் இருக்காது. அதைத்தானே தற்போதைய தலைவரும் விரும்புகின்றார், இருவரும் இல்லாமல் தற்காலிகத் தலைவராக தானே தொடரவேண்டும் என்று. ஆனால், அவர் தொடர்வதிலும் பார்க்க பாரம்பரியத்தை மீறினாலும் பரவாயில்லை யாராவது ஒருவர் வரலாம்" என்றார்.

அவரும் பாரம்பரியத்தைவிட பதவிதான் முக்கியம் என்றபோது தான் அந்தச் சம்பவமும் ஞாபகத்துக்கு வந்தது.

பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்த்த வெற்றியை அடையா மல்விட்ட உடனேயே தலைவர் மாவை பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கை கட்சி மட்டத்தில் பேசுபொருளாகியிருந்தது.

அப்போது மாவையை சந்தித்த சுமந்திரன், தான் தலைவராக இருக்கிறேன் என்றும் நீங்கள் பொதுச்செயலாளராக இருங்கள் என்றும் கேட்டுக்கொண்டாராம். அப்போது மாவை, "அது கட்சியின் மரபை பாதிக்கும் அல்லவா? கட்சிக்கு தலைவர் கிழக்கில் இருந்தால் செயலாளர் வடக்கிலும், தலைவர் வடக்கிலிருந்தால் செயலாளர் பதவி கிழக்குக்கும் வழங்குவதுதானே மரபாக இருந்து வருகின்றது" என்றாராம்.

அப்போது அவர், "அப்படி நமது கட்சி யாப்பில் இருக்கிறதா? இல்லையே. அது ஒரு பிரச்னையில்லை. நாம் அப்படிச் செய்வோம்" என்றிருக்கிறார்.

ஆனால், மாவை அதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை.

மாவையைப் பொறுத்தவரை தனது பதவியைவிட கட்சியின் பாரம்பரியம் - மரபு பாதுகாக்கப்படவேண்டும் என்பதே முக்கியமாக இருந்திருக்கவேண்டும். அது இதயத்தோடும் உணர்வோடும் சம்பந்தப்பட்டது அல்லவா?

அதுதான் போலும் இப்போதும் பாரம்பரியம் - மரபு பற்றியெல்லாம் அக்கறைப்படாமல் தலைமைப்பதவி ஒன்றிலேயே குறியாக இருக்கின்றார்கள்.!

இப்போதும் ஒன்றும் குடிமுழுகி விடவில்லை. மூவரும் இல்லாமல் புதியவர் (கவனியுங்கள் புதியவர்) ஒருவரை ஏகமனதாக தெரிவுசெய்யலாம்.!

**- ஊர்க்குருவி.**

# மண்டைதீவு பொலிஸ் காவலரண் மீது மண்ணெண்ணெய் குண்டு தாக்குதல்!

## போதை ஆசாமிகள் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 12

மண்டைதீவு பொலிஸ் காவலரண் மீது மண்ணெண்ணெய் குண்டு வீசிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இந்த சம்பவம் நடந்தது. மண்டைதீவிலுள்ள பொலிஸ் காவலரண் மீது நேற்று முன் தினம் இரவு இருவர் போத்தலொன்றை எறிந்துள்ளனர். அதனுள் மண்ணெண்ணெய் விடப்பட்டு, எரியக்கூடியவாறு தயார் செய்யப்பட்டிருந்தது. ஆனால், அது எரியவில்லை.

போத்தலை எறிந்த இருவரை பொலிஸார் மடக்கிப் பிடித்தனர். கைதான இருவரும் மதுபோதையில் இருந்தனர். ஊர்காவற்றுறை, மண்டைதீவை சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டனர். (ஐ)

# நடுக்கடல் விருந்துபசாரத்துக்கு 25 இலட்சம் ரூபாய் செலவாகியதா?

கொழும்பு, ஜன. 12

"கப்பல் பயணத்துக்கு எனது சொந்த பணத்தையே செலவு செய்தேன். 25 இலட்சம் ரூபாய் செலவு செய்து விருந்துபசாரம் நடத்தப்பட்டது எனக் கூறப்படும் கதையெல்லாம் போலியானவை." -இவ்வாறு துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் துறை இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார். ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு நடுக்கடலில் விருந்துபசாரம் நடத்தப்பட்டுள்ளது எனவும், மது விருந்துகூட இருந்துள்ளது எனவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இவற்றை இராஜாங்க அமைச்சர் முற்றாக நிராகரித்துள்ளார்.

"25 இலட்சம் ரூபாய் எனவும், கோடி கணக்கில் செலவளிக்கப்பட்டது எனவும் தொழிற்சங்கத் தலைவர் ஒருவர் கூறுகின்றார். இல்லை, சான்விச், ரோல்ஸ் உள்ளிட்டவைக்கு 14 ஆயிரம் ரூபா வரையே செலவளிக்கப்பட்டது. அதுவும் எனது சொந்தப் பணம்.

இந்த கண்காணிப்புப் பயணத்துக்கு மொத்தம் 3 லட்சம்தான் செலவானது. தேவையெனில் எரிபொருள் செலவையும் வழங்கத் தயார் - என்றார். (அ)

# வைத்தியசாலைகளில் இராணுவத்தினர் கடமை

கொழும்பு, ஜன. 12

மருத்துவமனைகளின் சேவைகளுக்குத் தேவைக் கேற்ப இராணுவத்தினரை அனுப்புவதற்கு தயார்படுத்துமாறு பாதுகாப்புப் படைத் தளபதிகளுக்கு இராணுவத் தளபதி பணிப்புரை வழங்கியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதனடிப்படையில், வைத்தியசாலைகளின் தினசரி நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நாடளாவிய ரீதியில் அரச வைத்தியசாலைகளில் சிறு தொழிலாளர் தொழிற்சங்கங்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளன.

இந்த வேலைநிறுத்தம் காரணமாக வைத்தியசாலைகளின் பணிகள் முடங்கியதுடன், நோயாளிகளும் கடும் அவதிக்குள்ளாகினர்.

எவ்வாறாயினும், சுகாதார அமைச்சு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேயிடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, வைத்தியசாலை நடவடிக்கைகளை இடையூறு இன்றி மேற்கொள்ளும் வகையில் படையினர் களமிறக்கப்பட்டுள்ளனர் என கூறப்பட்டுள்ளது. (அ)

# யாழ். வந்த பிரிட்டன் இளவரசி பொதுநூலகத்துக்கும் சென்றார்!



யாழ்ப்பாணம், ஜன. 12

நாட்டுக்கு நேற்று முன் தினம் வருகை தந்த பிரிட்டன் இளவரசி ஆன் நேற்று யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கும் சென்றார்.

இலங்கை - பிரிட்டன் நாடுகளின் இராசீய உறவு 75 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள நிலையில் அதனைச் சிறப்பிக்கும் வகையில் பிரித்தானிய அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசி திருமதி ஆன், அவரின் கணவர் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் ஆகியோர் மூன்று நாள் பயணமாக நேற்று முன்தினம் இலங்கை வந்தனர்.

இவர்கள் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்ததுடன் யாழ்ப்பாணம் பொது நூலகத்தையும் பார்வையிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன. 12

சுன்னாகம் மயிலணி திருவருள்மிகு முத்துமாரி அம்மன் ( வடலியம்மன்) திருக்கோவில் வருடாந்த பெருந் திருவிழாவை முன்னிட்டு சிறப்புச்சொற்பொழிவு ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தினமும் முற்பகல் 11 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்த சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

இதில், சைவப்புலவர்கள் கந்த. சத்தியதாசன், செ. த. குமரன், கா. கமலநாதன், பொன். சந்திரவேல், இளம் சைவப்புலவர்கள் நித்திய பாபுதரன், க. கைலநாதன், ச. நவநீதன், க. கயிலைவாசன் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளனர். (ஐ)

# சாவகச்சேரியில் 24 பேருக்கு சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல்!

தென்மராட்சி, ஜன. 12

சாவகச்சேரியில் டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான சூழலை வைத்திருந்த 24 குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையால் நுணாவில் பகுதியில் டெங்கு ஒழிப்பு செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதன் போது 129 இடங்கள் டெங்கு பரவுவதற்கு ஏதுவான இடங்களாக இனம் காணப்பட்டன. இந்த நிலையில், 24 குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டது. ஏனையவர்களுக்கு துப்பரவு செய்வதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
12.01.2024 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 27

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தென்னாபிரிக்காவின் மனிதநேய ஆட்டம்

காஸாவில் இனப்படுகொலை இடம்பெறுவதாகக் கூறி தென்னாபிரிக்கா சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருக்கின்றது. அதனை இஸ்ரேல் மறுத்திருக்கின்றது. இந்த நிலையில் தென்னாபிரிக்காவின் குற்றச்சாட்டை நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துள்ளது. சர்வதேச நீதிமன்றத்தில் நாடுகள் மட்டுமே வழக்குகளை தாக்கல் செய்ய முடியும்.

ஒரு நாடு வழக்கை கொண்டு சென்றால் அதனை விசாரிக்க வேண்டிய கடப்பாடு நீதிமன்றத்திற்கு உண்டு. அந்த வகையில் விசாரணை இடம்பெறுவது ஆச்சரியமானதல்ல. அதேவேளை - ஒருவேளை, சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலின்மீது குற்றம் சாட்டினாலும்கூட இஸ்ரேலை அதனால் கட்டுப்படுத்த முடியாது. இதற்கு பல உதாரணங்கள் உண்டு.

இப்போது இது அல்ல இங்கு விடயம். இலங்கையிலும் ஓர் இனப்படுகொலை இடம்பெற்றதாக நாம் கூறிவருகின்றோம். ஆனால், யுத்தம் இடம்பெற்று பதினான்கு ஆண்டுகள் கடந்து விட்ட பின்னரும்கூட எங்களைத் தவிர அதனை வேறு எவரும் பேசியதில்லை. காஸாவில் நடப்பன போன்ற அழிவுகளை ஈழத் தமிழர்களும் கண்டிருக்கின்றனர்.

யுத்தங்களின்போது, ஒரு குறுகிய நிலப்பரப்புக்குள் மக்கள் முடங்கும் போது அவ்வாறான சந்தர்ப்பத்தில் யுத்தம் தொடருமானால் மக்கள் பெருமளவில் கொல்லப்படுவார்கள். இது எவருமே அறியாதது அல்ல - அதேவேளை, இஸ்ரேல் மக்கள் மீது வலிந்து தாக்குதலை மேற்கொண்ட ஹமாஸ் அமைப்புக்கும் தெரியாததல்ல. இவ்வாறு மக்கள் கொல்லப்படுவார்கள் என்பதை எதிர்பார்த்துத்தான், ஹமாஸும் தாக்குதலில் ஈடுபட்டது.

ஆனால், ஈழத் தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் அகப்பட்டு கொல்லப்பட்டமை தொடர்பில் தென்னாபிரிக்கா வாய்திறந்ததில்லை - மாறாக, இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு ஆலோசனை வழங்கப் போவதாகக் கூறிவருகின்றது. இலங்கை மீதான ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பொறுப்புக்கூறல் பிரேரணைகளின் போது, தென்னாபிரிக்கா வாக்கெடுப்பை தவிர்த்து வருகின்றது. இது பற்றி, ஓய்வுபெற்ற பின்னர் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் முன்னைநாள் ஆணையாளர் நவிப்பிள்ளையே விமர்சித்திருந்தார். புவிசார் அரசியல் நலன்கள் - குறுகிய தேசியவாத நலன்களால், ஐ. நா. மனித உரிமைகள் பேரவை கட்டுப்படுத்தப்படுகின்றது. அதற்கு தன்னுடைய சொந்த நாடான தென்னாபிரிக்காவும் விதிவிலக்கல்ல என்றார்.

சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்புகளுக்கு பலம் பொருந்திய நாடுகள் பதிலளிப்பதில்லை - ஆகக் குறைந்தது அதனை கருத்தில் கொள்வது கூட இல்லை. இன்றைய உலகில் மனித உரிமைகள் எவ்வாறு அரசியல் நலன்களால் நிறுத்துப் பார்க்கப்படுகின்றன என்பதற்கு, தென்னாபிரிக்காவின் இந்தச் செயல்பாடு சிறந்த உதாரணமாகும். இந்த காஸா விடயமும் இன்னும் சில வருடங்களில் மறந்து போய்விடும் - முள்ளிவாய்க்காலைப் போல் - ஆனால், பலஸ்தீனத்துக்கு என்று ஓர் அரசாங்கமுண்டு - அவர்களுக்கு ஐ. நாவில் குரலுண்டு. எனவே, அவர்கள் தங்களின் குரல்களை அணைய விடமாட்டார்கள்.

# பிரித்தானிய இளவரசியின் யாழ். விஜயம் ஊடகவியலாளர்களுக்கு அனுமதியில்லை

## யூ-ரியூப்காரர்களுக்கு மட்டும் அனுமதி

*யாழ்ப்பாணம், ஜன. 12*

மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள பிரித்தானிய இளவரசி ஆன் மற்றும் அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்தனர்.



இந்நிலையில் இளவரசி விஜயம் செய்யும் இடங்களில் பிரதான ஊடகங்களின் ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிக்க அனுமதிக்கப்படவில்லை என்பதுடன் வலையொளி அலைவரிசை (YouTube Channel) உள்ளிட்ட நால்வருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொது சன நூலகத்துக்கு இளவரசி வருகை தந்த நிலையில் செய்தி சேகரிக்கச் சென்ற பிரதான ஊடகங்களின் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டமை கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் பிரபல ஊடகங்களை சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. அத்துடன் வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப்பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் அனுமதியளிக்கபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த விடயம் தொடர்பில் பிரித்தானிய தூதரகத்தை ஊடகவியலாளர்கள் தொடர்பு கொண்டு கேட்ட போது, யாழ்ப்பாணத்தில் இயங்கும் அறக்கொடை நிலையம் ஒன்றின் ஊடகப் பொறுப்பாளரே நான்கு பெயரை சிபாரிசு செய்ததாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# கடந்த 2 நாட்களில் பத்து பேர் மாயம்!

*கொழும்பு, ஜன. 12*

நாட்டில் கடந்த 2 நாட்களில் அடுத்தடுத்து 10 பேர் காணமற்போயுள்ளனர் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு காணாமற்போனவர்களில் வெலிபன்ன - பத்தினியாகொட பகுதியைச் சேர்ந்த 2 வயதுச் சிறுமியும், கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த 14 வயதான பாடசாலை மாணவியொருவரும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வறக்காபொலையைச் சேர்ந்த 26 வயதான நபரும், மொறட்டுவையைச் சேர்ந்த 57 வயதான பெண்ணும், முல்லேரியாவை சேர்ந்த 67 வயதுடைய நபரும் தம்பகல்லையைச் சேர்ந்த ஒருவரும், காரைத்தீவைச் சேர்ந்த 53 வயதான நபரும், வவுணதீவை சேர்ந்த 42 வயதான நபரும், மெதகமவைச் சேர்ந்த 40 வயதான நபரும் இவ்வாறு காணமற்போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த நபர்களைத் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

# கோப்பாய் பொலிஸ் அலுவலர் போதைப்பொருளுடன் கைது!

*யாழ்ப்பாணம், ஜன. 12*


கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பணி புரியும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் போதைப்பொருளுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை, கன்னியாவில் கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரிடமிருந்து 50 கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

கைதான பொலிஸ் உத்தியோகத்தர் மன்னாரை சேர்ந்தவர். இவர் பொலிஸ் சேவைக்கான அடிப்படை பயிற்சியை 01.09.2021 அன்று பூர்த்தி செய்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியதாக தெரிவிக்கப்படுகிறது.

நோய் வாய்ப்பட்டிருப்பதாக தெரிவித்துவிட்டு பணிக்கு சமுகமளிக்காமல் இருந்தபோதே போதைப் பொருளுடன் அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜனவரி - 12 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம் - மார்கழி 27
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : பிரதமை




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும் மறதியால் பிரச்னைகள் வந்து நீங்கும். தர்மசங்கடமான சூழல்களை சமாளிக்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். அமோகமான நாள்.

**சிம்மம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். சக நினைத்ததை முடிப்பீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். வாகனங்களை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி உண்டு. உழைப்பால் உயரும் நாள்.

**துலாம்**
புதிய முயற்சிகள் வெற்றியடையும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். தைரியம் கூடும் நாள்.

**விருட்சிகம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். மேலதிகாரிகள் மதிப்பார்கள். நன்மை நடக்கும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சோர்வு களைப்பு வந்து நீங்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் குறையும். கூடுதல் வேலை பார்க்க வேண்டி வரும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**மகரம்**
எளிதாக முடிய வேண்டிய சில காரியங்களை கூடப் போராடி முடிக்க வேண்டி வரும். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும்போது கவனம் தேவை. அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கும்பம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். மரியாதை கூடும் நாள்.

**மீனம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். முயற்சியில் வெற்றி பெறும் நாள்.

# இந்தியா கூட்டணியால் ஸ்டாலினை பிரதமர் வேட்பாளராக்க முடியுமா?

## பா. ஜ. க. தமிழக தலைவர் கேள்வி

கிருஷ்ணகிரி, ஜன. 12

''இந்தியா கூட்டணியில் உள்ள தலைவர்களான மம்தா, லாலு பிரசாத் உள்ளிட்டவர்களையோ, ஸ்டாலினையோ பிரதமர் வேட்பாளராக்க முடியுமா? இவர்கள் அனைவரும் ஊழல், குடும்ப ஆட்சியில் திளைத்தவர்கள்,'' என, பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டினார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில், 'என் மண் என் மக்கள்' யாத்திரையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதமர் மோடி தமிழ் மொழி, கலாசாரத்தை உலகம் முழுதும் பரப்பி வருகிறார். திருக்குறளை மேலும் பல மொழிகளில் மொழி பெயர்க்க நடவடிக்கை எடுக்கிறார். முதல்வர் ஸ்டாலின், 'மத்திய அரசு ஹிந்தியை திணிக்கிறது' என புலம்புகிறார்.

'இந்தியா' கூட்டணியில் உள்ள தலைவர்களான மம்தா, லாலு பிரசாத் உள்ளிட்டவர்களையோ, ஸ்டாலினையோ பிரதமர் வேட்பாளராக்க முடியுமா? இவர்கள் அனைவரும் ஊழல், குடும்ப ஆட்சியில் திளைத்தவர்கள்.

தி.மு.க., அரசு பதவியேற்று, 31 மாதங்களில் நடத்திய ஊழல், கொள்ளை அதிகம். மோடியை எதிர்க்க இந்தியாவில் ஆட்களே இல்லை என, காங்கிரஸ் பிரமுகர் கார்த்திக் சிதம்பரமே பேசியுள்ளார் -என்றும் கூறினார்.(ஐ)

# அயலக தமிழர் தின விழா சென்னையில் ஆரம்பம்!

## - இலங்கை உட்பட 58 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்பு -

சென்னை, ஜன. 12

அயலகத் தமிழர் தின விழா சென்னை வர்த்தக மையத்தில் 2 நாட்கள் நடைபெறுகிறது. விழாவை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். இன்றைய தினம் விருதுகள் வழங்கி முதல்வர் ஸ்டாலின் உரையாற்றவுள்ளார்.

தமிழக அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை 3-ம் ஆண்டாக 'தமிழ் வெல்லும்' என்னும் கருப்பொருளை மையமாகக் கொண்டு மாபெரும் அயலகத் தமிழர் தின விழாவை சென்னையில் நடத்துகிறது.

இந்த விழாவில் இலங்கை, மலேசியா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், துபாய், இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட 58 நாடுகளிலிருந்து தமிழ் வம்சாவளியினர், அமைச்சர்கள், கல்வியாளர்கள், கவிஞர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

அயல்நாடுகளில் வாழும் ஆயிரத்து 400இற்கும் மேற்பட்டோர் இம்மாநாட்டில் 218 சர்வதேச தமிழ் சங்கங்கள், 48 பிற மாநில தமிழ் சங்கங்கள் பங்கேற்றன.

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு சிறப்பு நிகழ்வாக அயலகத் தமிழர்களின் புத்தக வெளியீடு நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. இரண்டாம் நாளான இன்று முதல்வர் மு.க. ஸ்டாலின் சிறப்புரை நிகழ்த்துவதுடன் 'எனது கிராமம்' என்னும் முன்னோடித் திட்டத்தையும் தொடங்கி வைக்கிறார். இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் தாங்கள் பிறந்த கிராமத்தை மேம்படுத்த விரும்பும் அயலகத் தமிழர்கள் அதற்குரிய நிதியை அளித்து இத்திட்டத்தின் வாயிலாகச் செயல்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# புலிகள் அமைப்பை உருவாக்கவே போதைப்பொருள் கடத்தினாராம்!

## இந்திய இராணுவத்தின் முன்னாள் சிப்பாய் வாக்குமூலம்

சென்னை, ஜன. 12

“விடுதலைப் புலிகள் அமைப்பை மீண்டும் உருவாக்க போதைப் பொருள் மற்றும் ஆயுதங்களை கடத்தினோம்' என, சென்னையில் கைதான இந்திய இராணுவத்தின் முன்னாள் சிப்பாய் தேசிய புலனாய்வு நிறுவன அதிகாரிகளுக்கு வாக்குமூலம் அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஒகஸ்டில், இவரை போதை பொருள் மற்றும் ஆயுதங்கள் கடத்தல் வழக்கில், என். ஐ. ஏ. எனும் தேசிய புலனாய்வு நிறுவன அதிகாரிகள் கைது செய்து, புழல் சிறையில் அடைத்தனர். பின், இரண்டு நாட்கள் காவலில் எடுத்து விசாரித்துள்ளனர்.

இதில், அவர் அளித்த வாக்குமூலத்தில் சென்னை வளசரவாக்கத்தில் இருந்த இலங்கையை சேர்ந்த சபேசன் அறிமுகமானார். இவர், விடுதலைப் புலிகள் அமைப்பை மீண்டும் உருவாக்க போதைப் பொருள் கடத்தல் தொழிலில் ஈடுபட்டார். அந்த அமைப்பின் மீது இருந்த ஈர்ப்பின் காரணமாக, நானும் அந்த தொழிலில் ஈடுபட்டேன்.

சென்னையில் தங்கியிருந்த புலிகள் அமைப்பை சேர்ந்த குணசேகரன், புஷ்பராஜா, பூக்குட்டி கண்ணா மற்றும் இவர்களின் கூட்டாளி முகமது ஆஸ்மின் ஆகியோரை, சபேசன் அறிமுகம் செய்து வைத்தார். இவர்கள் சர்வதேச போதைப் பொருள் கடத்தல் கும்பலுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தனர். குணசேகரனின் பினாமியாக நான் செயல்பட்டேன்.

இலங்கை உள்ளிட்ட சில நாடுகளில் இருந்து, சட்ட விரோதமாக இந்தியா வந்து, போதைப் பொருள் மற்றும் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் கடத்தும் தொழிலில் ஈடுபடுவோருக்கு, நான் அடைக்கலம் கொடுத்து வந்தேன் - என்று கூறியுள்ளார். (ஐ)

# அ. தி. மு. க. சின்னம், கொடியை பாவிக்க ஓ. பி. எஸ்ஸுக்கு தடை!

## உயர்நீதிமன்றமும் உறுதி செய்தது

சென்னை, ஜன. 12

அ. தி. மு. க. கொடி, சின்னம், கடிதத் தலைப்பு உள்ளிட்டவைகளை ஓ. பன்னீர்செல்வம் பயன்படுத்த தடை விதித்தது செல்லும் என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2022 ஜூலை 11ஆம் திகதி நடந்த அ. தி. மு. க. பொதுக்குழுவில் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட 4 பேரை கட்சியில் இருந்து நீக்கியும், பழனிசாமியை இடைக்கால பொதுச் செயலாளராக தெரிவு செய்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதை எதிர்த்து ஓ. பி. எஸ். தொடர்ந்த வழக்கில், அவர் உட்பட 4 பேரை நீக்கி பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு தடை விதிக்க உயர் நீதிமன்றம் மறுப்பு தெரிவித்தது. இந்த நிலையில், அ. தி. மு. கவின் பெயர், கொடி, சின்னம், கடிதத் தலைப்பு போன்றவற்றை ஓ. பி. எஸ். தரப்பினர் பயன்படுத்த தடை விதிக்க கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பழனிசாமி மனு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி தடை உத்தரவை பிறப்பித்தார். இந்த வழக்கில் பன்னீர்செல்வம் தரப்பு மேன்முறையீடு செய்தது. நேற்று நடந்த இந்த வழக்கிலும் உயர்நீதிமன்றம் தடை உத்தரவை பிறப்பித்தது. (ஐ)

# யுக்திய வலையில் சிக்குவது வெறும் நெத்திலி மீன்களே!

## கூறுகின்றார் சரத் பொன்சேகா

**கொழும்பு, ஜன. 12**

**'யுக்திய' தேடுதல் நடவடிக்கைமூலம் எதிர்பார்க்கப்படும் பெறுபேறு கிடைக்கபெறுமா என்பது சந்தேகமே என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யுக்திய நடவடிக்கைமூலம் நெத்திலி மீன்களே பிடிபடுகின்றன. சுறாக்கள் இன்னும் சிக்கவில்லை. அதேபோல ஐந்து, ஆறு வருடங்களுக்கு முன்னர் குற்றம் இழைத்தவர்களும் கைது செய்யப்படுகின்றனர். எனவே, இந்த நடவடிக்கைமூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறு கிடைக்குமா என்பது சந்தேகமே.

முயற்சி எடுப்பது நல்லது. இந்நடவடிக்கை தொடர்பில் பெரிய விம்பத்தை பதில் பொலிஸ்மா அதிபர் தோற்று



வித்துள்ளார். அவர் இதற்கு முன்னரும் மேல்மாகாணத்துக்கு பொறுப்பாக இருந்தார். அந்த மாகாணத்தில்தான் அதிக போதைப்பொருள் குற்றச் செயல்கள் இடம்பெற்றன. தற்போது அவருக்கு திடீரென எங்கிருந்து சக்தி வந்தது?-என்றார். (அ)

# அரச ஊழியர்களின் பணி நேரம் மாற்றம்!

கொழும்பு, ஜன. 12

அரச ஊழியர்களின் பணி நேரத்தில் அதிரடி மாற்றமொன்று கொண்டுவரப்பட்டுள்ளது.

ஹஒரு சில அரச ஊழியர்கள் தமது பணிகளை உரிய நேரத்தில் ஆரம்பிப்பதில்லை எனவும், சரிவர நேரமுகாமைத்துவத்தைக் கடைப்பிடிப்ப தில்லையென வும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமையவே குறித்த மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் அரச ஊழியர்கள் காலை 8.30 மணி முதல் மாலை 4.15 மணி வரை அலுவலகங்களில் இருந்து கடமைகளில் ஈடுபடுவது கட்டாயமாக்கப் பட்டுள்ளதோடு, தமது அலுவலக அடையாள அட்டையையும் சீருடையினையும் அணிந்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மேலும் பொது தினமாக ஒதுக்கப்பட்டுள்ள திங்கட்கிழமைகளில் அமைச்சின் கீழ்மட்ட அதிகாரி முதல் அமைச்சின் செயலாளர் வரை அனைத்து மட்டத்திலான அதிகாரிகளும் அலுவலகத்தில் இருப்பது கட்டாயமாகக் கட்டாயமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அந்நாளில் நோய் அல்லது தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் தவிர வேறு எந்த காரணங்களுக்காகவும் விடுமுறை வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# யாழ். உள்ளூராட்சி மன்றங்களுக்கு இணையத்தளம் அங்குரார்ப்பணம்!



யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ்ப்பாணத்திலுள்ள ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான உத்தியோகபூர்வ இணையத்தளங்கள் வடக்கு மாகாண ஆளுநரால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது வேலணை, வலிகாமம் மேற்கு, நெடுந்தீவு, வடமராட்சி தெற்கு மற்றும் மேற்கு ஆகிய பிரதேச சபைகளுக்கும் பருத்தித்துறை நகர சபைக்குமான உத்தியோகபூர்வ இணையத்தளங்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

பொதுமக்கள் தங்களுக்கான சேவைகளை இணையத்தினூடாக பெற்றுக்கொள்வதற்கு தேவையான வசதிகளையும் வரி உள்ளிட்ட கட்டணங்களையும் இணையதளத்தினூடாக செலுத்துவதற்கான வசதிகளையும் மேம்படுத்தவேண்டும் என அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுறித்தியுள்ளார். (அ)

# ஜனாதிபதியை சந்தித்த பிரிட்டன் இளவரசி ஆன்

கொழும்பு, ஜன. 12

மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரித்தானியாவின் இளவரசி ஆன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளார்.

கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கோட்டை ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்த இளவரசி ஆன் உள்ளிட்ட அரச தூதுக்குழுவினரை வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி வரவேற்றார்.

அதன் பின்னர் இளவரசி ஆன் உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோருடன் இணைந்து சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டனர்.

இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில், ஜனாதிபதி மாளிகையில் வைக்கப்பட்டுள்ள சிறப்பு



விருந்தினர் நினைவுப் புத்தகத்தில் இளவரசி ஆன் பதிவைச் செய்துள்ளார்.

இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# கல்வியியல் கல்லூரி பீடாதிபதிக்கு கோப்பாய் கலாசாலையில் கௌரவம்

யாழ்ப்பாணம், ஜன. 12

35 ஆண்டுகளாக கல்வி சேவை ஆற்றி அரச பணியில் இருந்து ஓய்வு பெறுகிற யாழ்ப்பாணம் தேசிய கல்விக் கல்லூரி பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தத்தின் பணிகளை நயந்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூகம் முன்னெடுத்த பணி நயப்பு விழா கடந்த புதன் மாலை கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் இடம் பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலாசாலையின் விரிவுரையாளர்களும் கற்பித்தல் சாரா பணியாளர்களும் ஆசிரிய மாணவர்களும் பீடாதிபதி பரமானந்தத்தின் சேவைகளை நயந்து உரையாற்றினர்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு செயற்பாடுகளுக்கும் கல்விசார் செயற்




பாடுகளுக்கும் கல்வியியல் கல்லூரி சார்ந்து நல்கிய பங்களிப்புக்களுக்காக நன்றி தெரிவித்துடன் பொன்னாடை அணிவித்தும் வாழ்த்துத் தெரிவித்தும் கௌரவித்தனர்.

கௌரவம் பெற்ற பீடாதிபதி கலாநிதி சு பரமானந்தம் தான் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியராக தனது ஆசிரியர் வாண்மையை ஆரம்பித்து கொழும்பு பல்கலைக்கழகத்தில் அண்மையில் கலாநிதி பட்டம் பெற்றமை வரைக்கும் தான் மேற்கொண்ட கல்விசார் விடாமுயற்சிகள் பற்றி கலாசாலையின் ஆசிரிய மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார். (அ)

# புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை கொழுக்கட்டையுடன் ஒப்பிட்ட சிறிதரன்

கொழும்பு, ஜன. 12

"கொழுக்கட்டையும், மோதகமும் வடிவங்கள் வெவ்வேறாக இருந்தாலும் அவற்றின் உள்ளடக்கம் ஒன்றுதான். அதே போல்தான் புதிய பயங்கரவாத தடைச்சட்டமும். பழைய சட்டத்தில் இருந்த அனைத்து ஏற்பாடுகளும் இதில் உள்ளன. அப்பாவி மக்கள்மீது அவை பாயத்தான்போகின்றன."

-இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு,

1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் 44 ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கும் நிலையில் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் அச்சட்டத்தின்கீழ் கொல்லப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர். 66 ஆயிரம் போராளிகள் இந்த மண்ணில் இருந்து துடைத்தெறியப்பட்டுள்ளனர். ஜே.வி.பி. போராளிகள்கூட கொல்லப்பட்டனர்.

இராணுவத்திடம் தமது உறவினர்களை ஒப்படைத்தவர்கள் இன்று நிர்க்கதியாகியுள்ளனர். ஆனால் ஒப்படைக்கப்பட்டவர்களைக் காணவில்லை. அருட்தந்தை பிரான்ஸிஸ் தலைமையில் பல போராளிகள் சரணடைந்தனர். அவர்களுக்கு என்ன நடந்தது என தெரியவில்லை. அதற்கு நீதி கிடைக்கவில்லை. ஆனால் நீதிகோரி உறவுகளுக்காக போராடுபவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்படுகின்றனர். ஜெனிற்றா என்ற தாய்கூட அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார்-என்றார். (அ)

# வடக்கு-கிழக்கில் இடம்பெயர்ந்தோரின் காணி பிரச்னைக்கு 2 மாதங்களில் தீர்வு

## பிரதமர் தினேஷ் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 12

வடக்கு, கிழக்கில் இடம் பெயர்ந்து மீள் குடியேறியுள்ள மக்களின் காணிப் பிரச்னைகள் மற்றும் காணி உறுதிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் முன்னெடுக்கப்படும். அது தொடர்பில் ஜனாதிபதியின் வடக்கு விஜயத்தின்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டது என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் பிரதமரிடம் கேள்வி நேரத்தில் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



வடக்கு-கிழக்கில் மக்களின் காணி விவகாரங்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தி வருகிறது. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் சில கிராம சேவ உத்தியோகத்தர் பிரிவுகளில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு பல வருடங்கள் எடுத்தன. அதனால் சில பிரதேசங்களில் தற்காலிகமாக குடியேறியவர்களை நிரந்தர குடியேற்றவாசிகளாக்குவதற்கு தேவையான பாதுகாப்புச் சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதிலும் ஏனைய நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதி வடக்குக்கு விஜயம் செய்த ஒவ்வொரு தடவையும் அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு அங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தைகளும் நடத்தப்பட்டன. அதற்கான மேலதிக நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

1600 குடும்பங்கள் தொடர்பான ஆவணங்கள் இல்லாமலிருந்தன.அந்த வகையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவு உள்ளிட்ட சில பிரிவுகளின் காணிகள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக வடக்கு-கிழக்கில் காணப்படும் காணிகள் அங்கிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு கட்டம் கட்டமாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சட்ட பூர்வமற்ற ரீதியில் குடியிருப்போரை அங்கு நிரந்தர குடியிருப்பாளர்களாக்கு வதற்கான ஆவணங்களை பெற்றுக் கொள்வதில் சிக்கல்கள் காணப்படுவதால் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக அதன் முன்னேற்றம் தொடர்பான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு நடுத்தர மக்களின் காணிகளை மீளப் பெற்றுக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் அதன் முதல் உரிமையாளர்கள் உரிமை கோரி ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார்கள். எவ்வாறாயினும் இரு தரப்புக்குமிடையில் இணக்கப்பாடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனினும் சில காணிகள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படாத நிலையில் அதற்கான நடவடிக்கைகள் தாமதமாகியுள்ளன.

அத்துடன் இடம்பெயர்ந்தவர்கள் தற்போது வசிக்கும் காணிகளுக்கு சட்டபூர்வமான பதிவுகள் இல்லாத காரணத்தால் அந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நடவடிக்கைகள் தொடர்பில் வரவு-செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அந்த வகையில் வடக்கு-கிழக்கு பிரதேசங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்-என்றார். (அ)

# வவுனியா வைத்தியசாலையில் நேற்று ஊழியர்கள் போராட்டம்




வவுனியா, ஜன. 12

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை சிற்றூழியர்கள் பல்வேறு கோரிக்கைளை முன் வைத்து நேற்று வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் வைத்தியசாலை நுழைவாயில் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பள அதிகரிப்பு , ஊழியர் பற்றாக்குறையினை உடன் நிவர்த்தி செய், வாழ்வாதாரத்தை அதிகரி போன்ற கோரிக்கைகளை முன்வைத்து 30 நிமிடங்கள் அமைதியான முறையில் அவர் இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர். (அ)

# போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட பிரபல வர்த்தகரின் மகன் சிக்கினார்!

கொழும்பு, ஜன. 12

அனுராதபுரம் - கெக்கிராவ பிரதேசத்தில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட பிரபல வர்த்தகர் ஒருவரின் மகன் ஊழல் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் அனுராதபுரம் - கெக்கிராவ பிரதேசத்தை சேர்ந்த “சோனி” என்ற பிரபல வர்த்தகரின் 32 வயதுடைய மகனாவார்.

ஊழல் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடத்திலிருந்து 35 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவர் தனது தந்தையின் வர்த்தக நிலையம் ஒன்றில் இருந்து தபால்மூலமாக போதைப் பொருளை கடத்தி அவற்றை பொதிகளாக தயாரித்து வேறு பிரதேசங்களுக்கு அனுப்பி போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளதாக ஊழல் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊழல் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (அ)

# வீட்டு சுவர் இடிந்து விழுந்ததில் இளம் தாய் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 12

ஹிங்குரக்கொட - மின்னேரிய பிரதேசத்தில், வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் 23 வயதான தாயொருவர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன் குறித்த விபத்தில் கணவரும், ஒன்றரை வயதுக் குழந்தையும் படுகாயமடைந்த நிலையில் பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவிவரும் மழையுடனான காலநிலை காரணமாகவே குறித்த விபத்து இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹிங்குரகொட பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 12

நவகமுவ பகுதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவரே துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாதுகாப்புப் பணியாளர்கள் போன்று வேடம் தரித்த சந்தேகநபர்கள், உயிரிழந்தவரின் வீட்டுக்கு சென்றுள்ளனர்.

அதன் பின்னர், குறித்த நபரை அப்பகுதியிலுள்ள வயலுக்கு அழைத்துச்சென்று துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

சம்பவத்தில் காயமடைந்த நபர், சிகிச்சைகளுக்காக அத்துருகிரிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சுங்கப்பணிப்பாளரை நேரில் ஆஜராக நீதிமன்றம் உத்தரவு!

கொழும்பு, ஜன. 12

தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி டோஸ்களை இறக்குமதி செய்த வழக்கில் கைது செய்யப்பட்ட முதல் சந்தேக நபரால், வெற்று தடுப்பூசி குப்பிகள், நீர் சுத்திகரிப்பாளர்கள் மற்றும் நீர் சுத்திகரிப்பு கருவிகளை இறக்குமதி செய்தது தொடர்பான சுங்க அறிக்கைகளை சி.ஐ.டிக்கு வழங்கத் தவறியதால் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தை நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகுமாறு மாளிகாகந்த நீதவான் லோச்சனி அபேவிக்ரம உத்தரவிட்டுள்ளார்.

பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரியாகம முன்வைத்த உண்மைகளை அடுத்து நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

டிசெம்பர் 28 ஆம் திகதி இந்த சுங்க அறிக்கைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் சுங்கத்துக்கு உத்தரவிட்டபோதிலும் இதுவரை அறிக்கைகள் கையளிக்கப்படவில்லை.

இதேவேளை, தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் குப்பிகளை சர்ச்சைக்குரிய வகையில் கொள்வனவு செய்தமை தொடர்பில் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சந்திர குப்த உள்ளிட்ட சந்தேகநபர்கள் 7 பேரும் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றினால் மேலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் ஜனவரி 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# இலங்கையில் தொற்றா நோய்களால் வருடாந்தம் 120,000 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 12

தொற்றா நோய்கள் இலங்கையில் மரணத்திற்கு முக்கிய காரணியாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், தொற்றா நோய்களால் வருடாந்தம் சுமார் 120,000 பேர் இறக்கின்றனர்.

சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன தலைமையில் சுகாதார அமைச்சில் கடந்த செவ்வாய்க்கிழமை கூடிய தொற்றா நோய்கள் தொடர்பான தேசிய சபையில் இது தெரியவந்துள்ளது.

புகையிலை மற்றும் மது அருந்துதல், உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம், உயர் இரத்த சீனி மற்றும் அதிக கொழுப்பு ஆகியவை பரவாத நோய்கள் அதிகரிப்பதற்கான முக்கிய காரணங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. (அ)

# மலையக மக்கள் குறித்து பிரிட்டன் கூடிய கவனம் செலுத்த வேண்டும்!

## மனோ கணேசன் கோரிக்கை

கொழும்பு, ஜன. 12

**இலங்கையில் மலையகத் தமிழர்கள் புறக்கணிக்கப்படுவது தொடர்பில் பிரித்தானிய இளவரசி ஹேனியிடம் விளக்கமளிக்கப்படும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

அயலக தமிழர் மாநாடு நிகழ்வில் கலந்து கொள்வதற்காக தமிழகம் பயணித்துள்ள அவர், விடுத்துள்ள அறிக்கையொன்றின் மூலம் குறித்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், பாராளுமன்றத்தில் உள்ள தமிழ் உறுப்பினர்களின் கையொப்பத்துடன் மலையக மக்கள் தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் தொடர்பிலான கடிதமொன்று பிரித்தானிய இளவரசி ஆனியிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மலையக மக்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்ய பிரித்தானிய அரசாங்கம் முன்வர வேண்டும் என்றும் குறித்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவின் 75ஆண்டு கால நிறைவை முன்னிட்டு இடம்பெறும் நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக நாட்டிற்கு வருகை தந்துள்ள இளவரசி ஆன், மலையக மக்கள் தொடர்பிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளார். (அ)



# இலங்கையில் அதிகரிக்கும் துரித உணவு கலாசாரம்!

## மக்கள் வைத்திய பரிசோதனை மேற்கொள்வது அவசியம்

கொழும்பு, ஜன. 12

அதிகரிக்கும் துரித உணவு கலாசாரத்தின் காரணமாக நாட்டில் தொற்றாத நோய்கள் அதிகரித்து வருவதால் நாட்டு மக்கள் வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்வது அவசியம் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சினால் நேற்று நடத்தப்பட்ட தொற்றாத நோய்கள் குறித்த சந்திப்பு ஒன்றிலேயே இந்த விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

நாட்டில் அதிகரித்துள்ள துரித உணவு கலாச்சாரத்தால் மக்கள் எண்ணெய், சீனி மற்றும் உப்பு அதிகளவில் அடங்கிய உணவுகளை உட்கொள்கிறார்கள்.

இதன்மூலம், நாட்டு மக்களிடம் நீரிழிவு, புற்று நோய் மற்றும் இதய நோய்கள் அதிகரித்து வருவதாக சுகாதார நிபுணர்கள் குறித்த கூட்டத்தில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தொடர்ந்து, குறித்த தொற்றாத நோய்கள் அதிகரிப்பதை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண மற்றும் சுகாதார நிபுணர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மகிந்த ஒரு சிறந்த நடிகர்!

## கபீர் ஹாசீம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 12

வரித் திருத்தங்கள் ஊடாக சாதாரண மக்கள் மீதே அரசாங்கம் அதிகளவு சுமையை சுமத்தியுள்ளது. மாறாக செல்வந்தவர்களுக்கு பல வரி சலுகைகளை வழங்கியுள்ளது. இது தவறான முன்னுதாரணமாகும். அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், பணம் இருப்பவர்களிடம் அதிக வரியும் இல்லாதவர்களிடம் குறைந்த வரியையும் அறிவிடும் முறைமையொன்று அவசியமாகும்.” என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

ஹொலிவூட் மற்றும் பொலிவூட்டில் இல்லாத நடிகர்கள் பொதுஜன பெரமுனவில் உள்ளனர். மஹிந்த ராஜபக்சதான் அதில் சிறந்த நடிகர். மக்களை முட்டாள்களாக்கும் ஒரு நடிகராக அவர் உள்ளார் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வரவு - செலவுத் திட்டத்தில் வற் வரி உயர்வுக்கு கையை உயர்த்திவிட்டு இரண்டு நாட்களின் பின்னர் வரி அதிகரிப்புக்கு தாம் எதிர்ப்பை வெளியிடுவதாக மஹிந்த ராஜபக்ச கூறுகிறார். அவர் மூளை சரியாக வேளை செய்யாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளாரா எனத் தெரியவில்லை.

சப்ரகமுவயில் இடம்பெறும் பெரேராவில் இரண்டு முகங்களை கொண்டுசெல்லும் “மாபபா” வை போன்றவர்தான் மகிந்த ராஜபக்ஷ. பாராளுமன்றத்தில் ஒருமுகத்தையும் வெளியில் ஒருமுகத்தையும் கொண்டுள்ளார்.

வற் வரி திருத்தத்திற்கு அனுமதியளித்து ஒருவாரத்தின் பின்னர் சீனா போர்ட் லொஜிஸ்டிக் வர்த்தக கட்டடத்துக்கு அனுமதி அளித்துள்ளனர். இதனை அமைப்பதற்காக வற் வரி உட்பட அனைத்து வரிகளில் இருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது. சாதாரண மக்கள் உண்ணும் உணவுகளுக்கு வற் வரியை விதித்துவிட்டு செல்வந்தர்களுக்கு வரி சலுகைகளை வழங்குகின்றனர். இது மிகவும் தவறான செயலாகும்.

குறித்த கட்டடம் அமைக்கப்பட உள்ள பகுதிக்கு ஒரு வருடத்துக்கு குத்தகை நிதியாக 35 இலட்சம் டொலர்கள் அறவிட வேண்டுமென மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளபோதிலும், 5 இலட்சம் டொலர்களுக்குதான் வழங்கியுள்ளனர். இதனால் நாட்டுக்கு பல கோடிகள் இழப்பு ஏற்பட்டுள்ளது. 15 வருடங்களுக்கு நிறுவன மற்றும் சொத்து வரியில் இருந்தும் இந்த நிறுவனத்துக்கு சலுகை வழங்கப்பட்டுள்ளது.இதுதான் அரசாங்கத்தின் கொள்கை. சாதாரண மக்கள்தான் நாட்டுக்கு வரியை செலுத்த வேண்டியுள்ளது-என்றார். (அ)

# சாந்திபுரத்தில் கொட்டப்படும் மன்னார் நகரசபை குப்பைகள்

## தொற்று நோய் பரவும் அபாயம் அதிகரிப்பு

மன்னார், ஜன. 12

மன்னார் நகர சபை எல்லைக்குள் சேகரிக்கப்படும் கழிவுகளை முறையற்ற விதமாக சாந்திபுரம் காட்டுப்பகுதிக்குள் கொட்டுவதனால் டெங்கு நோய் உட்பட பல்வேறு தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சாந்திபுரம் கிராம மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மன்னார் நகரசபை முன்னதாக பாப்பா மோட்டை பகுதியில் உள்ள திண்ம கழிவகற்றல் நிலையத்தில் ஒழுங்கான முறையில் குப்பைகளை தரம் பிரித்து களஞ்சியப்படுத்தாமையினால் கொழும்பை சேர்ந்த அரசார்பற்ற நிறுவனம் ஒன்று வழக்கு தொடர்ந்து குறித்த பகுதியில் திண்ம கழிவுகளைச் சேகரிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் மன்னார் நகரசபைக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் இந்த தீர்ப்பை காரணம் காட்டி மன்னார் நகரசபை நீண்ட நாட்களாக மன்னார் நகர பகுதியில் கழிவகற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளாமல் நகரமே சுகாதார சீர்கேடுகளுக்கு உள்ளாகியிருந்தது.

ஏற்கனவே சாந்திபுரம் பகுதியில் மிருகங்களின் உடல் பாகங்கள், மருத்துவ கழிவுகள் உட்பட முறையற்ற விதமாக குப்பைகள் கொட்ட பட்ட நிலையில் மக்களின் எதிர்ப்பை அடுத்து குறித்த செயல்பாடு நிறுத்தப்பட்டிருந்தது.



இவ்வாறான நிலையில் மக்களின் எதிர்ப்பை மீறி மீண்டும் நகர சபை திண்ம கழிவுகளை அனுமதியின்றி தரம் பிரிக்காது சாந்திபுர காட்டுப் பகுதிக்குள் கொட்டுவதாக சாந்திபுரம் பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறிப்பாக உக்காத குப்பைகளையும் இலத்திரனியல் கழிவுகளையும் நீர் நிலைகளுக்குள்ளும் பள்ளங்களுக்குள்ளும் நகர சபை கொட்டி நிரப்பி வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் சாந்திபுரம் பகுதியில் தொற்று நோய்கள் பரவுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளமையினால் உடனடியாக நகரசபை குப்பை கொட்டும் செயற்பாட்டை நிறுத்துமாறும் கொட்டிய குப்பைகளை உரிய விதமாக அகற்றுமாறும் இல்லாவிட்டால் மக்களை திரட்டி நகர சபைக்கு முன்பாக போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாகவும் சாந்திபுரம் மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# நற்பெயரை பெறுவதற்கே சஜித் பாராளுமன்றில் தொடர்ந்து உரை

## அமைச்சர் பிரசன்ன கூறுகிறார்

கொழும்பு, ஜன. 12

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நற்பெயரை பெறும் நோக்கிலே பாராளுமன்றத்தில் உரைகளை நிகழ்த்தி வருவதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வின்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் உரைக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றில் உரையாற்றுவது எமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் குறிப்பிட்ட ஒரு விடத்தில் சுற்றுப்புறத்தையே தொடர்புப்படுத்தி பேசும்போது சபையில் நேரப் பிரச்னை எழுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் அவர் மிகவும் பொறுப்புடன் செயல்படவேண்டும்.

சபையில் உரையாற்றுவதை விடவும் குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சரிடமே நேரடியாக கேள்விகளை எழுப்பலாம்.

சபையில் அதிக நேரம் உரையாற்ற எதிர்கட்சி தலைவர் அனுமதிக்கப்படும் போது, அவரது கருத்துகள் பிரபல்யமாகும். மேலும் அவரது கருத்துக்கள் மாத்திரமே சரி என்ற கோணத்தில் பார்க்கப்படும்.

ஆளும் தரப்பு உறுப்பினர்களான எமக்கும் பிரச்னைகள் உண்டு. அதனையும் பேச எங்களுக்கு அனுமதி தாருங்கள்.

தொடர்ந்து எதிர்கட்சி தலைவர் சபையில் முன்னாள் ஜனாதிபதி தொடர்பில் பல்வேறு கருத்துக்களை முன்வைக்கின்றார்.

ஆனால் எதிர்க்கட்சித் தலைவரின் சகோதரி திருடப்பட்ட பணத்துடன் பிடிபட்டபோது முன்னாள் ஜனாதிபதியே அவரது சகோதரியை காப்பாற்றினார். இதுவும் நாட்டின் பொருளாதாரத்தை பாதித்தது-என்றார்.

# மட்டக்களப்பில் சீரற்ற வானிலையால் 5 ஆயிரத்து 461 குடும்பங்கள் பாதிப்பு!

**மட்டக்களப்பு, ஜன. 12**

**மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழை காரணமாக இதுவரையில் 5ஆயிரத்து 461 குடும்பங்களை சேர்ந்த 17ஆயிரத்து 531பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.**

நேற்று காலை 8.30 மணியளவில் முடிவடைந்த 24 மணி நேரத்தில் வாகனேரி பகுதியில் 174 மில்லி மீற்றர் பதிவாகியுள்ளது.

மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாக பெய்துவரும் அடைமழைகாரணமாக பல பகுதிகளுக்கான போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டுள்ள நிலையில் மக்களின் இடம்பெயர்வும் அதிகரித்து வருகின்றது.

வாகரை கல்லரிப்பு பிரதேச மக்கள் தொடர்ந்தும் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கான சமைத்த உணவு வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வாகனேரி குளத்தில் 19.2 அடிக்கு நீர்மட்டம் அதிகரித்துள்ளதுடன், வான்கதவு ஆறு அடி வரை திறக்கப்பட்டு நீர் வெளியேற்றப்படுகிறது.

மயிலம்பாவெளி பிரதேசத்தில் 130மில்லி மீற்றர் மழையும், தும்பங்கேணியில் 112.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

உருகாமம் பகுதியில் 103.9 மில்லி மீற்றர் மழை பதிவாகிய நிலையில், உருகாமம் குளத்தில் 15.8 அடிக்கு நீர் மட்டம் அதிகரித்துள்ளதுடன், இரண்டரை அடிக்கு நீர் வான்பாய்கின்றது.

உன்னிச்சை பிரதேசத்தில் 102 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதுடன், உன்னிச்சை குளத்தில் 33 அடிக்கு நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

தொடர்ந்து மழைபெய்துவருவதன் காரணமாக பிரதான குளங்கள், தாழ்நிலங்கள், நீரேந்து பகுதிகளுக்கு அருகில் உள்ள மக்களை அவதானமாயிருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ)

# சாய்ந்தமருது வெள்ள நிலைமை தொடர்பில் ஹரீஸ் எம்.பி ஆராய்வு



அம்பாறை, ஜன. 12

சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் தற்போதைய நிலை தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச். எம். எம் ஹரீஸ் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக்கை நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது பாதிப்பு நிலைகளை கேட்டறிந்த பாராளுமன்ற உறுப்பினர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் ஏற்பாடுகள் தொடர்பிலும் ஆராய்ந்து நிவாரணப் பணிகளை முன்னெடுக்கவும் முடிவெடுக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் சாய்ந்தமருது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ)



# காரைதீவு மாவடிப்பள்ளி வீதியில் பாயும் வெள்ளம்!

## சிறிய வாகனங்கள் செல்ல தடை

காரைதீவு, ஜன. 12

கடந்த சில நாட்களாக பொழிந்த கனமழை மற்றும் சேனநாயக்கா சமுத்திரத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டதால் வந்த வெள்ளத்தால் காரைதீவு மாவடிப்பள்ளி-அம்பாறை பிரதான வீதியில் இரு இடங்களில் வெள்ளம் பரவுகிறது.

நேற்று வியாழக்கிழமை வாகனங்கள் சிரமத்திற்கு மத்தியில் பயணித்தன. வானம் இருண்டிருந்தது. மழை குறைந்து காணப்பட்டது.

சிறிய வாகனங்கள் செல்ல தடை செய்யப்பட்டுள்ளது.

காரைதீவு இராணுவ முகாம் ஊடாக விபுலானந்தா கலாசார மண்டபத்திற்கு செல்லும் பிரதான வீதியில் வெள்ளம் பரவுகிறது. அங்கும் பயணிகள் சிரமத்திற்கு மத்தியில் பயணிக்கின்றனர்.

காரைதீவு வெள்ளக் காடாக காட்சிளிக்கிறது.

குறிப்பாக கந்தசுவாமி ஆலய வளாகத்தில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

மேலும் காரைதீவிலுள்ள தாழ் நில பிரதேசங்களிலும் வயல் வெளிகளிலும் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

கடற்றொழில் மற்றும் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. (அ)

# அம்பாறையில் பலத்த மழை!

## சேனநாயக்க சமுத்திரத்தின் அனைத்து வான்கதவுகளும் திறப்பு

அம்பாறை, ஜன. 12

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் அடை மழை காரணமாக இம்மாவட்டத்தின் சேனநாயக்க சமுத்திரத்தின் அனைத்து வான்கதவுகளும் திறக்கப்பட்டு துரித கதியில் நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால் அம்பாறை மாவட்டத்தின் தாழ் நிலப் பிரதேசங்கள் மிகுந்த ஆபத்தான பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது என அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த சில தினங்களாக அம்பாறை, மொனராகலை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக அம்பாறை சேனநாயக்க சமுத்திரத்தின் நீர் மட்டம் வெகுவாக உயர்வடைந்துள்ளது. இதன் காரணமாக இச்சமுத்தரத்தின் 110 அடி கொள்ளளவின் 109.5 அடி நீர் தற்போது நிறைந்துள்ளது.

அடைமழை காரணமாக அம்பாறை மாவட்டத்தின் 12



பிரதேச செயலகப் பரிவுகளில் 14827 குடும்பங்களைச் சேர்ந்த 46317 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வெள்ள நிலைமை காரணமாக இம்மாவட்டத்தில் 36 வீடுகள் பகுதியளவில் சேதடைந்துள்ளதுடன், இரு வீடுகள் முற்றாக சேதடைந்துள்ளன. பலத்த மடையுடனான காலநிலை காரணமாக வீடுகளில் வெள்ள நிலமை ஏற்பட்டுள்ளதால் 2993 குடும்பங்களைச் சேர்ந்த 9169 பேர் தமது இருப்பிடங்களில் இருந்து உறவினர்கள் மற்றும் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சீரற்ற கால நிலை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ள அச்சுறுத்தலை கருத்தில் கொண்டு தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் அனைத்து கல்வி நடவடிக்கைகளும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தென்கிழக்கு பல்கலைக்கழக பதிவாளர் எம்.ஐ நௌபர் தெரிவித்தார்.

இதுதவிர, அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியின் கல்வி நடவடிக்கைகளும் சீரரற்ற காலநிலை காரணமாக எதிர்வரும் 15ஆம் திகதி வரை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# டைனமட் வெடித்து ஒருவர் உயிரிழப்பு!

திருமலை, ஜன. 12

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட,ஏழு புளியடி சுனாமி மீள்குடியேற்ற கிராமப் பகுதியில் நேற்று முன் தினம் காலை டைனமட் வெடித்ததில் ஒருவர் உயிரிழந்து உள்ளார்.

பெரிய கிண்ணியா கட்டையாறு பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 58 வயதுடைய யுனைதீன் ரபாய்தீன் என்பவரை இவ்வாறு உயிர் இழந்துள்ளார்.

ஏழுபுளிடியாளியில் வசித்து வந்த இவரது மனைவி வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக குவைத்துக்குச் சென்று ஒன்றரை வருடங்களின் பின் மீண்டும் வீடு திரும்பி உள்ளார்.

அவர் வெளிநாட்டில் இருந்து வந்து ஐந்து நாட்களே ஆன நிலையில் இருவருக்கும் இடையே கருத்து முரண்பாடுகள், வாய் தர்க்கங்கள் ஏற்பட்டுள்ளன.

வெளிநாட்டில் இருந்து வந்த மனைவி தனது கணவனுடன் வாழ விருப்பமில்லை என கூறியுள்



ளார்.

இதன் காரணமாக மனம் சோர்வுற்ற கணவன் வெடித்துச் செத்துப் போவேன் என பலரிடம் கூறியுள்ளார்.

கூறியபடியே நேற்று முன் தினம் காலை தனது இடுப்பில் டைனமட் பொருளைக் கட்டிக் கொண்டு வெடித்து உயிர் இழந்து உள்ளார்.

இறந்தவரின் சடலம் ஏழு புளியடி மேல் குடியேற்ற கிராமத்தில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# இரண்டு பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்பு!

வவுணதீவு, ஜன. 12

வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாந்தீவு வாவியில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் படகில் மீன்பிடிக்கச் சென்ற நபர் இரண்டு தினங்களின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுணதீவு மாந்தீவு வாவிக்கு மீன்பிடி தொழிலிற்காக சென்றவரே இரண்டு தினங்களின் பின்னர் நேற்று முன் தினம் புதன்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டார்.

ஈச்சந்தீவு, நாவற்காடு பகுதியை சேர்ந்த 42 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான மீனவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாந்தீவை அண்டிய வாவியிலேயே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமைவாக சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், வவுணதீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# அமெரிக்காவின் பாதுகாப்பு செயலாளருக்கு புற்றுநோய்!

## வெள்ளை மாளிகையிடம் தெரிவிக்கவில்லை என சர்ச்சை

நியூயோர்க், ஜன. 12

**அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்டின் தான் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளதை வெள்ளை மாளிகையிடம் தெரிவிக்காமல் மறைத்தார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.**



டிசெம்பரில் இடம்பெற்ற சத்திர சிகிச்சைகளின் பின்னர் உடல்நிலை பாதிப்படைந்ததால் அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிரசிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விடயத்தினை அவர் சிரேஷ்ட அதிகாரிகளிடம் தெரிவிக்கவில்லை என குற்றச்சாட்டுகள் வெளியாகியுள்ளன.

இதன் பின்னர் அவர் பொது மக்களுக்கு உரிய விதத்தில் அறிவிக்காதமை குறித்து மன்னிப்பு கோரியுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் வெள்ளை மாளிகைக்கு தனது உடல்நிலை குறித்து அறிவிக்காத விடயம் தெரியவந்துள்ளதை தொடர்ந்து தேசிய பாதுகாப்பு கரிசனைகளும் பைடன் நிர்வாகத்திற்குள் வெளிப்படைத்தன்மை குறித்த விமர்சனங்களும் வெளியாகியுள்ளன.

பாதுகாப்புச் செயலாளர் தொடர்ந்தும் மருத்துவமனையிலேயே இருக்கின்றார் என்பதை பென்டகன் உறுதி செய்துள்ளது.

நேற்று முன் தினமே பாதுகாப்பு செயலாளர் புரொஸ்டிரேட் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை வெள்ளை மாளிகைக்கு தெரியப்படுத்தப்பட்டதாக தேசிய பாதுகாப்பு பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ)

# சீனா சனத்தொகை மீண்டும் குறைந்தது

## பலவீனமான பொருளியல் கொவிட் நெருக்கடி நிலையே காரணம்

பீஜிங், ஜன. 12



கொவிட்-19 தொடர்பான இறப்புகளின் அதிகரிப்பு காரணமாக சீனாவின் மக்கள் தொகை தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக 2023 ஆம் ஆண்டில் குறைந்துள்ளது.

நாட்டில் புதிதாக பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை, 2022 ஆம் ஆண்டை விட 2023ஆம் ஆண்டில் குறைந்துள்ளது என்று மக்கள்தொகை ஆய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர்.

இரண்டு ஆண்டுகளையும் ஒப்பிடும்போது, 2023 இல் சுமார் 9.56 மில்லியனுக்குக் குறைவாகவே புதிதாக பிறந்த குழந்தைகளின் எண்ணிகை உள்ளது என்று மக்கள் தொகை தரவுகள் காட்டுகின்றன.

பெய்ஜிங் 2022ஆம் ஆண்டு டிசம்பரில், எதிர்பாராதவிதமாக கொவிட்-19 தொடர்பான கட்டுப்பாடுகளை நீக்கியது. அதன் காரணமாக, 2023 இன் தொடக்கத்தில் சீனாவின் 1.41 பில்லியன் மக்கள் தொகைக்கு இடையே கொவிட்-19 கிருமித்தொற்று பரவி இறப்புகளை உயர்த்தியிருக்கும் என்று கூறப்படுகிறது. (அ)



# பப்புவா நியூ கினியாவில் வெடித்த பெரும் வன்முறை

## 15 பேர் உயிரிழப்பு

போர்ட் மோர்ஸ்பி, ஜன. 12

பப்புவா நியூ கினியாவின் தலைநகரான போர்ட் மோர்ஸ்பியில் ஏற்பட்ட பெரும் கலவரம் மற்றும் அமைதியின்மையினால் குறைந்தது 15 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பள முரண்பாடுகள் காரணமாக அந் நாட்டு பொலிஸார் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதை அடுத்து கலவரம் வெடித்தது.

வர்த்தக நிலையங்கள், வாகனங்கள் என்பன தீயிட்டுக் கொழுத்தப்பட்ட அதேநேரம், பல்பொருள் அங்காடிகளும் சூறையாடிப்பட்டுள்ளன.

தலைநகர் போர்ட் மோர்ஸ்பியில் எட்டு பேர் இறந்தனர், நாட்டின் ஏனைய பகுதிகளில் மேலும் ஏழு பேர் கொல்லப்பட்டதாக அவுஸ்திரேலிய ஒலிபரப்பு சேவையினை மேற்கோள் காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தமது சம்பள குறைப்புக்கு எதிராக கடந்த புதன்கிழமை முதல் பொலிஸார் அங்கு பணிப்பகிஷ்கரிப்பினை முன்னெடுத்துள்ளனர்.

இந் நிலையில் பிரதமர் ஜேம்ஸ் மராப், சம்பள குறைப்பினை ஏற்படுத்திய நிர்வாக பிழையினை சரி செய்வதாக உறுதியளித்துள்ளார். (அ)

# பிரிட்டனில் எரிசக்தி கட்டணம் அதிகரிப்பு

## உறைபனிக்கு மத்தியில் போராட தயாராகும் மக்கள்

லண்டன், ஜன. 12



பெரும்பாலான பிரிட்டிஷ் மக்கள் 'ஹீற்றர்' எனப்படும் வெப்பத்தை உருவாக்கும் சாதனத்தை ஜனவரியில் பயன்படுத்த விருப்பமில்லாமல் இருக்கின்றனர். ஏனெனில் அந்நாட்டில் நிலவும் உறைபனி வெப்பநிலையை விட ஹீற்றரைப் பயன்படுத்தும்போது வரும் எரிசக்தி கட்டணம் அதிகமாக இருப்பதால் அவர்கள் இந்த முடிவை எடுத்திருப்பதாக கூறப்பட்டது.

கிட்டத்தட்ட 65 வீத மக்கள் 'ஹீற்றர்' பயன்பாட்டைக் குறைத்துகொள்ளத் திட்டமிட்டிருப்பதாக கூறியுள்ளனர் என்றும் 7 வீதத்தினர் ஹீற்றரை அடைத்து வைக்க திட்டமிட்டுள்ளனர் என்றும் ஸ்வீடிஷ் புதுபிக்கப்பட்ட எரிசக்தி தொழில்நுட்ப நிறுவனமான 'அய்ரா' நடத்திய கணக்காய்வில் கூறப்பட்டது.

இந்தக் கணக்காய்வில் கலந்துகொண்ட மூன்று பங்கிற்கும் அதிகமானோர் குளிர்ந்த வெப்பநிலையைத் தாங்குவதற்கான முக்கிய காரணமாக உயர்ந்திருக்கும் எரிசக்தி விலையைக் குறிப்பிட்டனர் எனவும் அதே நேரம், பாதிக்கும் மேற்பட்டோர் தங்கள் தனிப்பட்ட நிதி சுமைகளை மேற்கோள் காட்டினர் எனவும் அது தெரிவித்தது.

"உயர்ந்து வரும் எரிசக்தியின் விலை, எரிசக்திக்காக இறக்குமதி செய்யப்பட்ட புதைபடிவ எரிபொருள்களை அதிகமாக நம்பியிருக்கும் நிலை ஆகியவற்றுடன் பிரிட்டிஷ் குடும்பங்கள் தொடர்ந்து போராடி வருகின்றன என்பதை இந்தக் கணக்காய்வு நமக்கு அப்பட்டமாக நினைவூட்டுகிறது" என அந்நிறுவனத்தின் தலைமை நிர்வாகி மார்ட்டின் லெவர்த் கூறினார். (அ)

# சிங்கப்பூரில் பாலியல் குற்றங்களை குறைக்க புதிய தண்டனை அறிமுகம்

சிங்கப்பூர் சிற்றி, ஜன. 12

சிங்கப்பூரில் கடும் பாலியல் குற்றம் புரிந்து நீண்டகால சிறைதண்டனையை பெற்றும் மீண்டும் அக்குற்றச்செயலில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அத்தகைய குற்றச்செயல்களை புரிவோருக்கு எதிராக புதிய தண்டனை விதிப்பு முறை இன்று முதல் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

கடுமையான பாலியல் குற்றங்கள், கடுமையான வன்முறைச் செயல்களில் ஈடுபட்டவர்கள் ஆகியோரை மையப்படுத்தியே புதிய தண்டனை விதிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

'எஸ்இபிபி' எனப்படும் பொதுமக்களுக்கு மேம்பட்ட பாதுகாப்பு அளிப்பதற்கான தண்டனை விதிப்பு முறை குற்றவியல் நடைமுறை சட்டமூலத்தின்கீழ் அறிமுகமானது.

அதன்படி கடுங்குற்றங்களைப் புரிந்தோர் தண்டனையை நிறைவேற்றியபின் சிறையிலிருந்து விடுவிக்கப்படுவது நிச்சயமற்றது.

குறிப்பாக இம்முறைமை மீண்டும் அக்குற்றங்களைப் புரியும் குற்றவாளிகளுக்கே பொருந்தும்.

இதுதொடர்பில் உள்துறை, சட்ட அமைச்சர் கா. சண்முகம் தெரிவிக்கையில்,

"சிங்கப்பூரில் சிலர் இளம் பெண்களைக் குறிவைப்பதை அறிகிறோம். அவர்கள் பாலியல் வன்கொடுமையில்தான் ஈடுபடுகிறார்கள் என்பதில்லை. சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகும் அவர்கள் மீண்டும் அதுபோன்ற குற்றங்களைப் புரிவதுண்டு.

தற்போது நடப்பில் இருக்கும் தண்டனை விதிப்பு முறைகள் அத்தகைய கடுங்குற்றங்கள் புரிவோரைக் கையாளப் போதுமானவை அல்ல" என தெரிவித்தார்.

கொலைக் குற்றவாளிகள், கொலை முயற்சியில் ஈடுபட்டவர்கள், பாலியல் வன்கொடுமையில் ஈடுபடுவது, சட்டபூர்வ வயதை அடையாதோருடன் பாலியல் உறவு வைத்துக்கொள்வது போன்ற கடும் பாலியல் குற்றங்களைப் புரிந்தோர் ஆகியோர் மட்டுமே எஸ்இபிபி தண்டனை விதிப்பு முறைக்கு உட்படுத்தப்படுவர்.

எஸ்இபிபிக்குக் கீழ் ஒரு குற்றவாளி ஐந்திலிருந்து 20 ஆண்டுகள் வரை தடுப்புக் காவலில் வைக்கப்படலாம். அவர்களின் சிறைத் தண்டனைக் காலமும் குறைக்கப்படாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 500 சுப்பர் மார்க்கெட்டுகள் நாட்டில் மூடப்படும் நிலை!

## வாடிக்கையாளர் தொகை 75 வீதம் வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 12

**பொருட்களின் விலைகள் பெருமளவு அதிகரித்துள்ள நிலையில் சூப்பர் மார்க்கெட்டுகளுக்கு வரும் வாடிக்கையாளர் தொகை 75 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

இதன் காரணமாக நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள சுமார் ஐந்நூறு பல்பொருள் அங்காடிகள் மூடப்படும் அபாயத்தில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. மூடப்படவுள்ள பெரும்பாலான பல்பொருள் அங்காடிகள் மேல் மாகாணத்தில் அமைந்துள்ளன.

பல்பொருள் அங்காடிகளில் அதிக எண்ணிக்கையிலான பணியாளர்கள் பணியமர்த்தப்பட் டுள்ளதாகவும், வாடிக்கையாளர்கள் குறைவினால் அவர்களது சம்பளமும் பிரச்னையாக உள்ளதாகவும் வர்த்தக சங்கங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# யுக்திய நடவடிக்கை குறித்து அமெரிக்க தூதுவர் அதிருப்தி



கொழும்பு, ஜன. 12

யுக்திய நடவடிக்கை தொடர்பில், இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் வெளியிட்டுள்ள கரிசனைகளை, அமெரிக்காவும் பகிர்ந்து கொள்வதாக, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

சட்ட அமுலாக்கல் நடவடிக்கைகள், சட்டத்தின் ஆட்சியின் கொள்கைகளை, உரிய நடைமுறைகளை பின்பற்றுவதாக அமைய வேண்டும்.

இந்த சமநிலையை பேணுவது, நீதிக்கும் மக்களின் நம்பிக்கையை தக்க வைப்பதற்கும் அவசியம் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் குறிப்பிட்டுள்ளார். (அ)

# வழமைக்கு திரும்பியது ரயில் சேவை

கொழும்பு, ஜன. 12

ஹப்புத்தளை மற்றும் தியத்தலாவ ரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் பாறைகளுடன் கூடிய மேடு சரிந்து வீழ்ந்ததன் காரணமாக தடைப்பட்டிருந்த மலையக ரயில் பாதையின் போக்குவரத்து தற்போது வழமைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் மாலை 5:30 மணியளவில் ஹப்புத்தளை, தியத்தலாவைக்கு இடைப்பட்ட 155/27 கிலோமீற்றர் தூணுக்கு அருகில், ரயில் பாதையில் பாறைகளுடன் மண்மேடு சரிந்து விழுந்து ரயில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது.

ரயில்வே ஊழியர்கள் மற்றும் பதினைந்து இராணுவ சிப்பாய்களின் பங்கேற்புடன், ரயில் பாதை விரைவாக சரி செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி நேற்று ரயில் போக்குவரத்து வழமை போன்று இடம்பெற்றதாக நாவலப்பிட்டி ரயில்வே கட்டுப்பாட்டு அறை தெரிவித்தது. (அ)

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய மிளகாய் தூள் தொழிற்சாலையின் உரிமையாளருக்கு அபராதம்

கொழும்பு, ஜன. 12

சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய மிளகாய் தூள் தயாரிக்கும் தொழிற்சாலையின் உரிமையாளர் ஒருவருக்கு பதுளை நீதவான் நீதிமன்றம் 52,500 ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

ஹாலி எல, நுவரெலியா வீதியில் அமைந்துள்ள மிளகாய் தூள் தயாரிக்கும் தொழிற்சாலையின் உரிமையாளரான தெஹிவளை பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய வர்த்தகருக்கே அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த தொழிற்சாலையை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சோதனையிட்டபோது எலி மலம் கலந்த பொலித்தீன் பையில் 31 கிலோ கிராம் மிளகாய் தூள் மற்றும் கரப்பான் பூச்சிகள், எறும்புகள் காணப்பட்ட பூஞ்சை பிடித்த 25 கிலோ காய்ந்த மிளகாய் என்பன கைப்பற்றப்பட்டதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

பின்னர், மிளகாய்த் தூள் தயாரிப்பதற்காக 25 கிலோ எடையுள்ள எலி மலம் அடங்கிய காய்ந்த மிளகாய் பொதிகளைச் சேமித்து வைத்தமை, அசுத்தமான உபகரணங்களுடன் மிளகாய் தொழிற்சாலையை நடத்தியமை , சுகாதார சீர்கேடான கட்டடத்தில் தொழிற்சாலையை நடத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் இவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அபராதத் தொகைக்கு மேலதிகமாக, குறித்த தொழிற்சாலை கட்டடத்தை எதிர்வரும் மார்ச் மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் சுகாதார சீர்கேடு இன்றி திருத்தியமைத்து, சுகாதார பரிசோதக அதிகாரிகளின் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீதவான் சந்தேக நபருக்கு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தப்பிய 5 கைதிகளில் இருவர் கைதாகினர்!

கொழும்பு, ஜன. 12

வெலிகந்தை கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து, நேற்று முன் தினம் இரவு 5 கைதிகள் தப்பிச் சென்ற நிலையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவரும், புலஸ்திபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுங்கவில பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக, வெலிகந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், ஏனைய மூவரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை, பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, கடந்த டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி, கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து நூறுக்கும் மேற்பட்ட கைதிகள் தப்பியோடிய நிலையில், பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

# யுக்திய நடவடிக்கையினால் குற்றங்கள் குறைந்தனவாம்!

கொழும்பு, ஜன. 12

போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான யுக்திய நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட கடந்த டிசம்பர் 17 ஆம் திகதி முதல் இம்மாதம் 3 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் குற்றச் செயல்கள் கணிசமானளவு குறைந்துள்ளதாக குற்றப்பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காலிங்க ஜயசிங்க தெரிவித்தார்.

கொலை, பாலியல் துஷ்பிரயோகம், வீடு உடைத்தல், வாகனங்களைக் கொள்ளையிடுதல் போன்ற பல குற்றங்கள் வன்முறைக் குற்றத்தின் கீழ் வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெளிப் பிரதேசங்களிலிருந்து கொழும்புக்குள் பிரவேசித்த பஸ்கள் உட்பட பெருந்தொகையான வாகனங்கள் நேற்றுக் காலை பல இடங்களிலும் நிறுத்தப்பட்டுச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. (அ)

# ஒரு கிலோ சிவப்பு சீனியின் விலை 415 ரூபாவாக உயர்வு!

கொழும்பு, ஜன. 12

வற் வரி 18 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளமை யினால் சந்தையில் ஒரு கிலோகிராம் சிவப்பு சீனியின் விலை 415 ரூபாயாக அதிகரித்துள்ளதாக சீனி வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

பல்வத்த மற்றும் செவனகல சீனி தொழிற்சாலைகளில் இருந்து மாத்திரமே சிவப்பு சீனி உற்பத்தி செய்யப்படுவதுடன் நேற்று முன் தினம் நடைபெற்ற ஒப்பந்த அடிப்படையின் பின்னர் ஒரு கிலோ கிராம் சீனி 322 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

இதன்படி ஒரு கிலோகிராம் சீனியின் விலை 390 ரூபாயைத் தாண்டியுள்ளதாக வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கமைய தமது இலாபத்தையும் சேர்த்த பின்னர் ஒரு கிலோ சிவப்பு சீனியின் விலை 415 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதேவேளை, இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் வெள்ளைச் சீனி சந்தையில் 265 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதன்படி சிவப்பு சீனியின் விலையை விட இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலை சுமார் 150 ரூபாய் குறைந்துள்ளதாக வர்த்தகர்கள் குறிப்பிட்டனர். (அ)

# இலங்கையில் நெற்செய்கைக்கு இனிமேல் ட்ரோன் தொழில்நுட்பம்

கொழும்பு, ஜன. 12

நெற்செய்கைக்காக இந்த வருடம் முதன்முறையாக ட்ரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன் முதற்கட்டமாக அனுராதபுரம், அம்பாந்தோட்டை, குருநாகல், பொலனறுவை, வவுனியா மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கு நூறு ஆளில்லா விமானங்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இரண்டாவது கட்டத்தின் கீழ், நெல் பயிரிடப்படும் அனைத்து மாவட்டங்களிலும் அமைந்துள்ள 563 விவசாய சேவை மையங்களுக்கு தலா ஒரு ஆளில்லா விமானத்தை வழங்குவதாகவும் விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்கவும், நெல் விதைக்கவும், நெற்பயிர்களை அளக்கவும், நோய்களைக் கண்டறியவும் முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# சுண்டிக்குளம் உப அஞ்சல் அலுவலகம் இடமாற்றம் செய்யப்படுவதற்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

வடமராட்சி மருதங்கேணி பிரதேசத்திற்குட்பட்ட போக்கறுப்பு கிராம சேவகர் பிரிவில் இயங்கி வந்த சுண்டிக்குளம் உப அஞ்சல் அலுவலகம், இடமாற்றம் செய்யப்படுவதற்கு, அப்பகுதி மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இதுவரை காலமும் இயங்கி வந்த சுண்டிக்குளம் உப அஞ்சல் அலுவலகத்தை, போதிய வருமானம் இன்மை என்னும் அடிப்படையில், வேறு இடத்திற்கு மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக, மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதுவரை காலமும் வருமானத்தை ஈட்டிவந்த சுண்டிக்குளம் உப அஞ்சல் அலுவலகத்திற்கு, தூர பிரதேசத்தில் இருந்து அதிகாரிகள் பணிக்கு வருவது சிரமம் என்பதனாலேயே, அஞ்சல் அலுவலகம் இடமாற்றம் செய்யப்படுவதாக, மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

## 42ஆயிரத்துக்கும்...

அஞ்சப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் 30 ஆயிரத்து 195 குடும்பங்களை சேர்ந்த 97 ஆயிரத்து 978 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 2 வீடுகள் முழுமையாகவும் 143 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. சேனநாயக்க சமுத்திரத்தின் 110 அடியை கடந்துள்ளது.

இதனிடையே, அம்பாறை மாவட்டத்தில் பல ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இவ்வாறு, இடம்பெயர்ந்த குடும்பங்கள் 228 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் 11 ஆயிரத்து 525 குடும்பங்களை சேர்ந்த 39 ஆயிரத்து 38 பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. (ஐ-06)

## பிரதான...

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

போதைப்பொருள் கடத்தலை நாட்டிலிருந்து இல்லாதொழிக்க, போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் பிரதான நபர்களை கைது செய்ய வேண்டும். போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையை உரிய முறையில் முன்னெடுக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறேன்-என்றார். (அ)

## கிடப்பில்...

வழக்கின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குருந்தூர்மலை பிரதேசத்திலே நீதிமன்ற கட்டளையை நிறைவேற்றப் பட வேண்டும் என அமைதிவழியிலே போராட்டத்தை நடாத்திய அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள் உள்ளடக்கிய நபர்களுக்கு எதிராக முல்லைத்தீவு பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது நேற்று நீதிமன்றத்திலே எடுத்து கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கின் போது முல்லைத்தீவு பொலிஸார் தாங்கள் இது தொடர்பாக சட்டமா அதிபரிடம் மேலதிக ஆலோசனை பெற வேண்டும் என விண்ணப்பம் செய்திருந்தனர்.

நேற்று சந்தேகநபர்கள், இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் உட்பட ஐந்து நபர்களாக இணைக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் சார்பிலே முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தினை சார்ந்த அனைத்து சட்டத்தரணிகளும் ஆஜராகி விண்ணப்பம் செய்திருந்தோம்.

குறித்த வழக்கானது பிழையாக தாக்கல் செய்யப்பட்ட அமைதி வழி யிலே போராடிய அரசியல் வாதிகள் மற்றும் சமூக அக்கறையுள்ளவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கென மன்றிற்கு தெரிவித்திருந்தோம்.

மேலும் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறும் வரையில் இவ் வழக்கினை கிடப்பில் போட வேண்டும் எனவும் மேலதிகமாக இந்த வழக்கினை தொடர வேண்டும் என சந்தர்ப்பம் ஏற்பட்டால் மாத்திரம் குறித்த சந்தேக நபர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டு மீண்டும் இந்த வழக்கானது நீதிமன்றிலே கொண்ட செல்லப்பட முடியும் எனவும் விண்ணப்பம் செய்திருந்தோம். அதனை ஏற்றுக்கொண்ட நீதவான் குறித்த வழக்கினை கிடப்பில் போட்டுள்ளார். மீளவும் அறிவித்தல் கிடைத்தால் மாத்திரம் குறித்த சந்தேக நபர்கள் வழக்கிற்கு வருகை தர வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

குறித்த வழக்கிற்கு பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் ஜீட்சன் ஆகியோர் தோன்றியிருந்தனர்.-என்றார். (அ)

## இளவரசியின்...

பூட்டப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு மீள திறக்கப்படும்' என அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

இளவரசி உள்ளிட்ட குழுவினர் யாழ். பொது நூலகத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டமையால் பாதுகாப்பு ஏற்பாட்டிற்காக நூலகம் மூன்றரை மணி நேரம் பூட்டப்பட்டது என தெரிவிக்கப்பட்டது.

எனினும், அறிவித்தலில் 'விசேட காரணம்' என குறிப்பிட்டு இருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

(தொடர்புடைய செய்தி 2,3ஆம் பக்கங்களில்)

## சர்வதேச...

இழுவை படகுகளை கட்டுப்படுத்த தயங்கும் கடற்படை சர்வதேச பாதுகாப்பிற்காக அனுப்பப்படுகிறது.

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களை கைது செய்வதும், கைதானவர்களை விடுவிப்பதுமே அரசாங்கத்தின் தொடர் செயற்பாடாக காணப்படுகின்றது.

இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரத்தை அச்சுறுத்தும் வகையிலும், எமது நாட்டின் வளங்களை அழிக்கும் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்தாது விடுப்பது கவலையளிக்கிறது.

ஜனாதிபதியின் அண்மைய விஜயத்தின்போதும் மீனவர் பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடுதற்கு மீனவ அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட வில்லை. அதேபோல் வெளிநாட்டு படகுகளும் இலங்கை அரசின் அனுமதியினை பெற்று நமது நாட்டு வளத்தை சூறையாடுவதை எம்மால் ஒருபோதும் அனுமதிக்க முடியாது - என்றார். (அ)

## தமிழரசு...

ஆகியோர் போட்டியிலிருந்து விலக மறுத்தனர். இதேசமயம் யோகேஸ்வரன் சிறீதரனுக்கு ஆதரவளிப்பதாகவும் அவர் தலைவராவதென்றால் போட்டியிலிருந்து விலகுவதாகவும் கூறினார்.

எனினும், சுமந்திரனும் சிறீதரனும் விட்டுக்கொடுப்புக்கு மறுத்த நிலையில், தேர்தலை நடத்துவது என்ற முடிவுக்கு வந்தனர். இதனை கட்சிக்கும் தெரிவித்தனர்.

எனவே, எதிர்வரும் 21ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறும் பொதுக்குழு கூட்டத்தில் கட்சியின் தலைவரை தெரிவதற்கு தேர்தல் நடத்தப்படும். இரகசிய வாக்கெடுப்பாகவே இந்தத் தேர்தல் நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அம்புலன்ஸ்...

வரும் வழியில் விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்து எவ்வாறு நிகழ்ந்தது என்று தெரிய வராத நிலையில், டிராக்டர் நின்ற இடத்தில் இருந்து ஒருசில மீற்றர்கள் தூரத்தில் இளைஞர் படுகாயமடைந்து கிடந்துள்ளார். சிறிது நேரத்தின் பின்னரே இளைஞரை கண்ட ஊரவர்கள் அவரை அங்கிருந்து தூக்கிச் சென்றனர்.

அத்துடன், அவரை ஊர்காவற்துறை மருத்துவமனையில் சேர்ப்பிப்பதற்காக அம்புலன்ஸ் படகுக்கும் அறிவித்துள்ளனர். படகு வரத் தாமதமாகியிருந்தது. இதனால், கடற்படையினரின் விரைவு படகு மூலமாக ஊர்காவற்துறைக்கு கொண்டு சென்று மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

எனினும், அங்கு சென்ற சிறிது நேரத்திலேயே இளைஞர் உயிரிழந்து விட்டார்.

அனலைதீவில் போதிய மருத்துவ வசதிகளை செய்து தருமாறு பல வருடங்களாக தாங்கள் கோருகின்ற போதிலும் அது நிறைவேற்றப்படவில்லை. இதனாலேயே இந்த உயிரிழப்பும் நேர்ந்துள்ளது. இது விடயத்தில் அரசியல்வாதிகள், அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். (ஐ)

# றின் மீன் இறக்குமதியை நிறுத்துமாறு உத்தரவு!



கொழும்பு, ஜன. 12

உள்நாட்டு றின் மீன் கைத்தொழிலை ஊக்குவிக்கும் வகையில் நேற்று முதல் வெளிநாடுகளில் இருந்து றின் மீன் இறக்குமதியை நிறுத்துமாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த விடம் பணிப்புரை விடுத்துள்ளார்.

றின் மீன் உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் அமைச்சர் தேவானந்தாவிற்கும் இடையில் கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, றின் மீன் தொழில்துறை எதிர்நோக்கும் பல பிரச்னைகள் அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டது.

கடந்த சில மாதங்களாக வெளிநாடுகளில் இருந்து சுமார் 8000 தொன் றின் மீன்கள் இறக்குமதி செய்யப்படுவதால் உள்ளூர் றின் மீன்களை உள்ளூர் சந்தையில் விற்பனை செய்ய முடியாமல் போனது முக்கிய பிரச்னையாக சுட்டிக்காட்டப்பட்டது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் றின் மீன்களின் விலை குறைவடைந்துள்ளதாகவும், அரசாங்கம் விதித்துள்ள ஏயுவு மற்றும் செஸ் வரிகளினால் இறக்குமதி செய்யப்படும் றின் மீன்களின் விலைக்கு தமது உற்பத்திகளை வழங்க முடியாதுள்ள தாகவும் அமைச்சரிடம் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், நேற்று முதல் றின்மீன் இறக்குமதியை தற்காலிகமாக நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கியதுடன், தற்போதைக்கு மேலதிக கட்டணத்தை அறவிடுவது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை ஆராயுமாறு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

## சீரற்ற வானிலை...

பொலனறுவை மாவட்டத்தின் ஹிகுரக் கொடநெல்பார பிரதேசத்தில் களிமண் வீடு ஒன்றில் சுவர் இடிந்து விழுந்ததில் 23 வயதுடைய ஒரு பிள்ளையின் தாய் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த ஒன்றரை வயது குழந்தை மற்றும் அவரது கணவரும் பொலனறுவை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அடை மழையினால் அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

12 வருடங்களின் பின்னர், அம்பாறை சேனாநாயக்க சமுத்திரம் மற்றும் அம்பாறை நீர்த்தேக்கம் மற்றும் கொன்டுவடுவான நீர்த்தேக்கம் ஆகிய பெருக்கெடுத்ததன் காரணமாக வெள்ளத்தில் மூழ்கிய அம்பாறை - இங்கினியாகல பிரதான வீதி சுதுவெல்ல பிரதேசத்திலிருந்து மூடப்பட்டுள்ளது.

மேலும், கல் ஓயா, மொரவில் ஓயா, பல்லன் ஓயா மற்றும் எக்கக் ஓயா ஆகியன நிரம்பி வழிவதால் அம்பாறை ஹிகுரான வீதியின் ஒரு பகுதி நீரில் மூழ்கியுள்ளதுடன், போக்குவரத்து தடைகளும் விதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பதுளை மாவட்டத்தில் மண்சரிவு அபாயம் அதிகரித்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மண்மேடு சரிந்த காரணத்தால் போக்குவரத்து நிறுத்தப்பட்ட பதுளை கொழும்பு வீதியின் ஹாலிஎல உடுவர 7 ஆம் தூண் பகுதியை வாகன போக்குவரத்துக்காக சீர் செய்யும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், ஹாலிஹெல கெடவல வீதியில் ஏற்பட்ட மண்சரிவினால் அவ்வழியாகச் செல்லும் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டதால், உயர்தரப் பரீட்சைக்கு செல்லும் பரீட்சார்த்திகள் கடும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

லுனுகல பிபில ஏ-5 பிரதான வீதி அரவாகும்புர பிரதேசத்தில் பாறைகள் மற்றும் மண் மேடு சரிந்து வீழ்ந்துள்ளதால் முற்றாக தடைப்பட்டுள்ளது.

நாட்டின் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான மட்டக்களப்பு உறுகாமம் குளம் மற்றும் ரூகம் குளத்தில் தலா மூன்று வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிக முகாம்களுக்கு அனுப்பப்பட்டதுடன், மழை காரணமாக மட்டக்களப்பு ரயில் பாதை உட்பட பல தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

இதனால் கொழும்பு கோட்டைக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் இன்று இரவு இயக்கப்படவிருந்த மீனகயா நகரங்களுக்கு இடையிலான அதிவேக ரயில் இரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மழை காரணமாக பல முக்கிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதுடன், பல குளங்களும் நிரம்பி வழிகின்றன. (அ)

## வெள்ளத்தில்...

இருப்பதால் முக்கிய ஆவணங்களையும் பல்கலைக்கழக சொத்துக்களையும் பாதுகாப்பாக அகற்றும் நடவடிக்கைகளில் பல்கலைக்கழக ஊழியர்களும், இராணுவத்தினரும் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (அ)

## சுற்றுலாக்...

நேற்று பாராளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியிருந்தார்.

இதனையடுத்து, ஆளும் தரப்பு பிரதம கொரடாவான பிரசன்ன ரணதுங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையே சபையில் கருத்து மோதல் ஏற்பட்டது.

அதேநேரம், இந்த விடயம் தொடர்பாக நேற்று விளக்கமளித்த இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர, தனது சொந்த செலவிலேயே இந்த விருந்துபசாரம் ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்.

அதேநேரம், இந்த விடயம் தொடர்பாக நேற்று விசேட செய்தியாளர் சந்திப்பின்போது கருத்து வெளியிட்ட துறைமுகங்கள் மற்றும் கப்பற் போக்குவரத்து இராஜாங்க அமைச்சரான பிரேமலால் ஜயசேகர, தனது சொந்த செலவிலேயே இதற்கான நிதி வழங்கப்பட்டதாகத் தெரிவித்தார். (அ)

ஈழநாடு
Eelanadu

# ஆளுங்கட்சியின் எம்.பிக்கள் நடுக்கடலில் கொண்டாட்டம்

## நாட்டு மக்களோ திண்டாட்டம்
## சபையில் சாடினார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஜன. 12

**பொருட்களின் விலை தாறுமாறாக அதிகரித்து மக்கள் திண்டாடும் நிலையில், மகிந்த ராஜபக்ஷவும், அமைச்சர்களும் மக்கள் பணத்தில் கப்பல்களில் நடுக்கடலுக்கு சென்று விருந்துபசாரம் நடத்துகின்றனர் _ என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.**

பாராளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிட்ட அவர்-

ஜனவரி மாதம் பாடசாலை மாணவர்களுக்கான சீசன் ரிக்கெட்டுகள் இரத்து செய்யப்பட்டுள்ளவேளையில், வற் வரி விதிப்பால் மக்கள் பல்வேறு அழுத்தங்களுக்கும் அல்லல்களுக்கும் உள்ளாகியுள்ள இவ்வேளையில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பாராளுமன்றத்தில் அரசாங்கத்துடன் தொடர்புடைய அமைச்சர்கள் குழுவொன்று துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான ஹன்ஸகாவா மற்றும் தியாகொவுல்லா ஆகிய 02 கப்பல்களை பயன்படுத்தி கடந்த இரு நாட்களுக்கு முன்பு கடலில் விருந்துபசார கொண்டாட்டமொன்றை நடத்தியுள்ளனர். இதற்கு துறைமுக அமைச்சர் எழுத்து மூல அனுமதியும் வழங்கியுள்ளார்.

நாடு வங்குரோத்தாகி கிடக்கும் இவ்வேளையில் மதுபானம், துறைமுகத்தில் உள்ள உணவகத்தில் இருந்து உணவு, குடிபான வகைகளைக்கூட பெற்றுக் கொண்டு, நாட்டுக்குச் சொந்தமான கப்பல்களைப் பயன்படுத்திக் கொண்டு எரிபொருளை விரயம் செய்து, நடுக்கடலில் விருந்து நடத்தி கும்மாளமடிக்க முடியுமா என்பது பிரச்னைக்குரிய விடயம். அமைச்சர்களின் தனிப்பட்ட செலவில் இந்த விருந்துபசாரங்களை நடத்துவது பிரச்னையல்ல. அரச வளங்களைப் பயன்படுத்தி இவ்வாறான விருந்துபசாரங்கள் நடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது-என்றார். (அ)



# நாட்டு பொருளாதாரம் 2024 இல் 1.7 வீதமாக வளர்ச்சி அடையும்!

## உலக வங்கி கணிப்பு

கொழும்பு, ஜன. 12

நாட்டின் பொருளாதாரம் இந்த வருடத்தில் 1.7 வீதமாகவும் 2025 ஆம் ஆண்டில் 2.4 வீதமாகவும் வளர்ச்சியடையும் என உலக வங்கி கணித்துள்ளது.

உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் குறித்த உலக வங்கியின் அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி உலக வங்கியின் அறிக்கைக்கு இணங்க, நாட்டின் பொருளாதாரம் 2023 இல் 3.8 சதவீத எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

2022-2023 நிதியாண்டில் இலங்கையின் உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இறையாண்மைக் கடன் மறுசீரமைப்பில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

மேலும் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியில், தனியார் கடன் வழங்குநர்களுடன் இலங்கைக்கான கண்ணோட்டம் நிச்சயமற்றதாகவே உள்ளது என்றும் உலக வங்கி குறிப்பிட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதி தேர்தலில் ரணில் நிச்சயமாக போட்டியிடுவார்!

## உறுதிப்படுத்தினார் ஹரின்



கொழும்பு, ஜன. 12

ஆண்டின் இறுதியில் நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிச்சயமாக போட்டியிடுவார் என அமைச்சர் ஹரின் பெரண்டான்டோ தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஜனாதிபதி தேர்தலை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும். தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் போட்டியிடுவார்-என்றார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பணிகளை ஆரம்பித்துள்ளதாக அண்மையில் தேர்தல்கள் ஆணைக்குழுவும் அறிவித்திருந்தது. இதனால் கட்சிகள் தமது பிரசார நடவடிக்கைகளையும், கூட்டணி அமைக்கும் செயல்பாடுகளையும் மும்முரமாக மேற்கொண்டு வருகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்தவாரம் அதன் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளது. அதன் நிமித்தம் அடுத்த வாரம் கொழும்பில் பிரமாண்ட கூட்டமொன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் ஐ.தே.கவின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக அக்கட்சி அறிவிக்க உள்ளதாக அறிய முடிகிறது. (அ)

# வேலணைப் பாலம் புனரமைக்கப்படுமா?

## சிறீதரன் எம்.பி. கேள்வி



கொழும்பு, ஜன. 12

யாழ்ப்பாணம், வேலணைத்துறையில் இருந்து புங்குடுதீவு மடத்துவெளி வரையான 4 கிலோமீற்றர்கள் பாலம், 60 வருடங்களாக புனரமைப்பு இன்றி ஆபத்தான நிலையில் காணப்படுவதால், அவசரமாக பாலத்தைப் புனரமைக்க யாரிடமாவது நிதி உதவியைக் கோர முடியாதா என்றும் அமைச்சர் பந்துலவிடம் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கேள்வியெழுப்பினார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சிறீதரன் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வேலணைப் பாலம் என்பது, புங்குடுதீவில் 8 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட ஒரு பெரிய தீவையும், நெடுந்தீவு எனும் தனியான பிரதேச செயலாளர் பிரிவை உடைய தனித்தீவையும், நயினாதீவு எனும் தனித்தீவையும் உள்ளடக்கிய பிரதான பாதையில் இருக்கிற பாலம் ஆகும்.

கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்ட இந்த பாலம் யுத்த காலத்தில் எவ்வித புனரமைப்புப் பணிகளும் செய்யப்படவில்லை. புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு இந்த தீவுப் பகுதிகளின் மக்கள் தமது சொந்த ஊர்களுக்குச் சென்று வரவும், சொந்த ஊர்களில் குடியேறவும் வேண்டும் என்றால் பிரதான போக்குவரத்துப் பாதையில் உள்ள இந்தப் பாலத்தை புனரமைத்து தர வேண்டும் என்று கேட்கின்றனர்.

வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இந்தப் பாலமும், வழுக்கையாறு தொடக்கம் அராலி, வேலணை, புங்குடுதீவு வரையான பாதையும் 60 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைப்பு செய்யப்படவில்லை.

ஆங்காங்கே வீதிகள் மட்டும் காப்பெட் இடப்பட்டு செப்பனிடப்பட்டுள்ளன. ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி இப்படி யாரிடமாவது அவசர உதவியைப் பெற்று துரித கதியில் இலங்கையின் மிக நீளமான 4 கிலோமீற்றர் உடைய பாலத்தையாவது புனரமைக்க ஏதாவது வழி இருக்கிறதா என்று ஆராயுங்கள். சரியான திட்டங்களை வகுத்தால் தீவுப்பகுதிகளைச் சேர்ந்த புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் தமது பங்களிப்புகளை வழங்குவார்கள்-என்றார்.

சிறீதரன் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் பந்துல குணவர்த்தன,

தற்போதைய நிலையில் வரி செலுத்துகின்ற மக்களின் நிதியிலிருந்து குறித்த பாலத்தை புனரமைக்க முடியாது.

கடந்த அரசாங்கம் வடக்கின் வசந்தம் - கிழக்கின் உதயம் அபிவிருத்தி திட்டங்களின் கீழ் வீதிகள், பாலங்களை புனரமைத்தது உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் மற்றைய நாடுகளின் நிதி உதவியில் தான்.

ஆகவே, இப்போது செய்ய முடியாத காரணம். எடுத்த கடனை நாங்கள் செலுத்தவில்லை. கடன் மறுசீரமைப்பு செய்யும் வரை 5 சதம் கூட யாரும் தரமாட்டார்கள்-என்றார். (அ)

# சபரிமலை சென்ற ஐயப்ப பக்தர் நடுவானில் திடீரென உயிரிழப்பு!

சென்னை, ஜன. 12

கொழும்பிலிருந்து சென்னை மீனம்பாக்கம் அண்ணா பன்னாட்டு விமான நிலையத்துக்கு விமானம் மூலம் சென்ற யாழ். ஐயப்ப பக்தர் நடுவானில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையைச் சேர்ந்த 49 வயதுடைய மோகனதாஸ் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

ஐயப்ப பக்த நண்பர்களுடன் விமானம் மூலம் சபரி மலைக்குச் சென்றவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விமானம் நடுவானில் பறந்துகொண்டிருந்தபோது குறித்த நபருக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டது.

விமானத்தில் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.

எனினும் அவரது உடல்நிலை மோசமானதால், இது பற்றி விமான நிலைய கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு கொண்டு அவசர கால மருத்துவ உதவிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

விமானம் சென்னையில் தரையிறங்கியதும் தயாராக இருந்த மருத்துவ குழுவினர் விமானத்தில் ஏறி குறித்த நபரை பரிசோதனை செய்தபோது அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இது குறித்து தகவல் அறிந்த விமான நிலைய பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக குரோம்பேட்டை அரச வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# ஐ. பி. எல். ரி - 20 தொடருக்கான பயிற்சியை தொடங்கினார் டோனி!

ராஞ்சி, ஜன. 12

அடுத்த சில மாதங்களில் ஐ. பி.எல். 2024 தொடர் தொடங்குகிறது. இந்த நிலையில் அதற்கான பயிற்சியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் டோனி தொடங்கியுள்ளார். அவர், துடுப்பாட்ட பயிற்யில் ஈடுபடும் காணொலி பிரபலமாகி வருகிறது.

42 வயதான டோனி, கடைசியாக கடந்த 2019இல் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் விளையாடி இருந்தார். அதன் பிறகு ஐ. பி. எல். களத்தில் மட்டுமே அவர் விளையாடி வருகிறார். கடந்த ஆண்டு ஐ. பி. எல். சம்பியன் பட்டத்தை அவர் தலைமையிலான சென்னை அணியே கைப்பற்றியது.

அவர் ஓய்வு பெறுவார் என்று கூறப்பட்ட நிலையில், 2024 ஆம் ஆண்டு ஐ. பி. எல். தொடரில் விளையாடுவேன் என்று அவரே கூறியிருந்தார். இந்த நிலையில், அவர் பயிற்சியை தொடங்கியுள்ளார். டோனி சென்னை அணிக்காக 220 போட்டிகளில் டோனி விளையாடியுள்ளார். 191 இன் னிங்ஸ்களில் 4,508 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

**2024 சென்னை அணி -**

டோனி (அணித்தலைவர்), மொயீன் அலி, தீபக் சாஹர், கொன்வே, துஷார் தேஷ் பாண்டே, ஷிவம் துபே, ருதுராஜ் கெய்க்வாட், ராஜ்வர்தன் ஹங்கர் கேகர், ரவீந்திர ஜடேஜா, அஜய் மண்டல், முகேஷ் சவுத்ரி, பத்திரண, ரஹானே, ஷேக் ரஷீத், சான்ட்னர், சிமர்ஜித் சிங், நிஷாந்த் சிந்து, பிரசாந்த் சோலங்கி, மகேஷ் தீக்ஷனா, ரச்சின் ரவீந்திரா, ஷர்துல் தாக்கூர், டேரில் மிட்செல், சமீர் ரிஸ்வி, முஸ்தபிசுர் ரஹ்மான், அவனிஷ் ராவ்.




# ஆப்கானுடனான ரி - 20 விராட் கோலி விலகல்!

புதுடெல்லி, ஜன. 12

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி -20 தொடரில் ஆடவுள்ளது. இதன்படி இந்த இரு அணிகளுக்கு இடையிலான முதலாவது ஆட்டம் நேற்று நடந்தது.

இந்தப் போட்டியில் விராட் கோலி இடம்பெற்ற போதிலும் அவர் நேற்றைய போட்டியில் பங்கேற்கவில்லை. அத்துடன், ஏனைய இரு போட்டிகளிலும்கூட கோலி விலகியுள்ளார் என்று பயிற்றுநர் டிராவிட் தெரிவித்துள்ளார். (ஐ)



# அடிலெய்ட் ரென்னிஸ் ரைபகினா காலிறுதியில்!

அடிலெய்ட், ஜன. 12

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் அடிலெய்ட் சர்வதேச ரென்னிஸ் போட்டியில் கஜகஸ்தானின் எலனா ரைபகினா, அமெரிக்காவின் ஜெஸிகா பெகுலா ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறினர்.

மகளிர் ஒற்றையர் 2ஆவது சுற்றில், போட்டித்தர வரிசையில் முதலிடத்தில் இருக்கும் ரைபகினா 6-3, 7-5 என்ற செற்களில் ஸ்பெயினின் கிறிஸ்ரினா பக்ஸாவை சாய்த்தார். காலிறுதியில் அவர், ரஷ்யாவின் எகாடெரினா அலெக்ஸாண்ட்ரோவாவை எதிர்கொள்கிறார்.

ரஷ்யாவின் அனஸ்தாசியா பாவ்லியுசென்கோவா 2-6, 6-3, 6-2 என்ற செட்றளில் செக் குடியரசின் காட்டெரினா சினியாகோவாவை வெளியேற்றினார். இதையடுத்து, காலிறுதியில் பெகுலா - அனஸ்தாசியா சந்திக்கின்றனர்.

# அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான மே. இ. தீவுகள் அணி அறிவிப்பு!

சென். ஜோன்ஸ், ஜன. 12

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆட உள்ளது. இதில், முதலாவதாக டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வரும் 17ஆம் திகதி தொடங்குகிறது,

இந்நிலையில் அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி -20 தொடர்களுக்கான 15 வீரர்கள் கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.




**ஒருநாள் அணி:**

ஷாய் ஹோப் (அணித்தலைவர்), அல்சாரி ஜோசப், அலிக் அதானாஸ், டெடி பிஷப், கீசி கார்ட்டி, ரோஸ்டன் சேஸ், மேத்யூ போர்டே, ஜஸ்டின் க்ரீவ்ஸ், கவேம் ஹாட்ஜ், டெவின் இம்லாச், குடகேஷ் மோட்டி, க்ஜோர்ன் ஒட்டேலி, ரொமாரியோ ஷெப்பர்ட், ஒஷேன் தோமஸ், ஒஷேன் தோமஸ் ஜூனியர்.

**ரி - 20 அணி**

ரோவ்மேன் பவல் (அணித் தலைவர்), ஷாய் ஹோப், ஜோன்சன் சார்ள்ஸ், ரோஸ்டன் சேஸ், ஜசன் ஹோல்டர், அகேல் ஹொஸைன், அல்ஜாரி ஜோசப், பிராண்டன் கிங், கைல் மேயர்ஸ், குடாகேஷ் மோட்டி, நிக்கோலஸ் பூரன், ஆண்ட்ரே ரஸ்ஸல், ஷெர்பேன் ரூதர், ரோமர்யோ ஷெஃபர்ட், ஒஷேன் தோமஸ்.

# தொடக்க வீரராக களமிறங்கும் ஸ்மித்!

மெல்பர்ன், ஜன. 12

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் ஸ்ரீவ் ஸ்மித் தொடக்க வீரராகக் களமிறங்குவார் என்று அவுஸ்திரேலிய அணி அறிவித்துள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 ரி -20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆடவுள்ளது.

இதில் முதலாவதாக டெஸ்ட் தொடர் நடைபெற உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வரும் 17ஆம் திகதி தொடங்குகிறது,

இந்நிலையில் மேற்கிந்தியாவுக்கு எதிரான ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடர்களுக்கான அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் டெஸ்ட் அணிக்கு பட் கம்மின்ஸ் அணித் தலைவராகவும், ஒருநாள் அணிக்கு ஸ்ரீவ் சுமித் அணித் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், பாகிஸ்தானுக்கு எதிரான தொடருடன் அவுஸ்திரேலியாவின் டேவிட் வோர்ணர் ஓய்வு பெற்றிருந்தார். இதனால், தொடக்க வீரர் யார் என்ற கேள்வி எழுந்தது.

இந்த நிலையில், ஸ்ரீவ் ஸ்மித் தான் தொடக்க வீரராக களமிறங்க விருப்பம் தெரிவித்தார்.

முன்னதாக மூன்றாவது இடத்தில் ஆடி வந்த ஸ்டீவ் ஸ்மித், லபுஷேனின் வருகையால் நான்காவது இடத்திற்கு மாறினார். பந்தை சேதப்படுத்திய குற்றத்துக்காக ஓராண்டு தடை பெற்ற ஸ்ரீவ் சுமித், 2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஆஷஸ் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதன் காரணமாக ஸ்ரீவ் ஸ்மித்தின் பேட்டிங் சராசரி 60 ஆக இருந்தது.

இந்த நிலையில், மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியில் ஸ்ரீவ் ஸ்மித் தொடக்க வீரராகக் களமிறங்குவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளார். (ஐ)



தீபக் மண்டல்

# லட்சத் தீவு - மாலைதீவு பிரச்னை: ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கை சமூக ஊடகங்களில்தான் முடிவுசெய்யப்படுகிறதா?

பிரதமர் நரேந்திர மோடி ஜனவரி 4 ஆம் தேதி லட்சத்தீவுகளின் படங்களைப் பகிர்ந்துகொண்டு, சுற்றுலாப் பயணிகள் இத்தீவுகளுக்கு வருமாறு வேண்டுகோள் விடுத்த பிறகு, மாலத்தீவு அமைச்சர்கள் சிலரின் மோடி மற்றும் இந்தியாவுக்கு எதிரான கருத்துக்கள் இரு நாடுகளுக்கும் இடையே புதிய சர்ச்சையை உருவாக்கியுள்ளன.

இருப்பினும், இந்த விவகாரத்தை குளிர்விக்கும் வகையில், ஆட்சேபனைக்குரிய கருத்துக்களை தெரிவித்த மாலத்தீவு அமைச்சர்களை மாலைதீவு அரசு சஸ்பெண்ட் செய்ததுடன், இதுபோன்ற செயல்களைப் பொறுத்துக் கொள்ள முடியாது என்று கூறியது.

ஆனால் திங்களன்று, இந்திய வெளியுறவு அமைச்சகம் இந்தியாவிற்கான மாலத்தீவு தூதர் இப்ராஹிம் ஷா ஹிப்பை அழைத்து, பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக சமூக ஊடகங்களில் ஆட்சேபனைக்குரிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டது குறித்து தீவிர கவலையை வெளிப்படுத்தியது.



உண்மையில், இந்த முழு விஷயமும் சமூக ஊடகங்களில் வேகம் பெற்றன.

ஜனவரி 4 ஆம் தேதி, பிரதமர் மோடி லட்சத்தீவுக்குச் செல்லும் புகைப்படங்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்துகொண்டு, சுற்றுலாப் பயணிகள் லட்சத்தீவுக்குச் செல்லுமாறு வேண்டுகோள் விடுத்தார். இதைத் தொடர்ந்து, சுற்றுலாப் பயணிகள் இனி மாலத்தீவுக்குப் போகாமல் லட்சத்தீவுக்குச் செல்ல வேண்டும் என்று சமூக வலைதளங்களில் சிலர் கூறத் தொடங்கினர்.

சில மாலத்தீவின் சமூக ஊடக ஆர்வலர்கள் மற்றும் அதிபர் முகமது முய்சுவின் அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் மாலத்தீவை லட்சத்தீவுடன் ஒப்பிடுவதை எதிர்மறையான கோணத்தில் பார்த்து, பிரதமருக்கும் இந்தியாவுக்கும் எதிராக ஆட்சேபகரமான கருத்துகளை தெரிவித்தனர்.

இந்த கருத்துகளுக்குப் பிறகு, இந்தியாவில் உள்ள சில பொதுவான பயனர்கள் மற்றும் பிரபலங்களும் சர்ச்சையில் குதித்து மாலத்தீவைப் புறக்கணிக்க வேண்டும் என்ற முழக்கத்தை முன்வைத்தனர்.

சுற்றுலாப் பயண நிறுவனமான “இஸ் மை ட்ரிப்” மாலத்தீவுக்கான முன்பதிவைக் கூட ரத்து செய்தது.

அதே நேரத்தில், மாலத்தீவின் ஆதரவாளர்கள் தங்கள் நாட்டின் கடற்கரைகளின் படங்களைப் பகிர்ந்து கொள்ளவும், அதன் அழகைப் பற்றி பேசவும் தொடங்கினர்.

மாலத்தீவில் தற்போது அதிபர் முகமது முய்சுவின் ஆட்சி நடைபெற்று வருகிறது. முய்சு மக்கள் தேசிய காங்கிரஸின் உறுப்பினராகவும், கூட்டணிக் கட்சியான மாலத்தீவு முன்னேற்றக் கட்சியின் வேட்பாளராகவும் தேர்தலில் போட்டியிட்டார்.

### ஏன் மாலத்தீவு இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துள்ளது?

இந்தியாவுக்கு ஆதரவாகக் கருதப்படும் மாலத்தீவு ஜனநாயகக் கட்சியின் முகமது சோலியை முகமது முய்சு தோற்கடித்தார். அவரது கட்சி தேர்தலுக்கு முன்பு ‘இந்தியா அவுட்’ என்ற முழக்கத்தை முன்னெடுத்திருந்தது.

தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு, மாலத்தீவில் இருக்கும் இந்திய ராணுவ வீரர்களை இந்தியாவுக்கே திருப்பி அனுப்பப்போவதாக முய்சு கூறியிருந்தார்.

ஊடகங்களுடனான அவரது பிரத்யேக உரையாடலில், இந்தியப் படைகள் அங்கு இருப்பது மாலத்தீவை ஆபத்தில் ஆழ்த்தக்கூடும் என்றும் குறிப்பாக சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே எல்லைப் பிரச்னையில் பதற்றத்தை ஏற்படுத்தும் என்றும் முய்சு கூறியிருந்தார்.

“மாலத்தீவு மிகச் சிறிய நாடு, பெரும் வல்லரசுகளுக்கு இடையே நடக்கும் பல சோதனையில் சிக்கிக் கொள்ளும் அபாயத்தில் அது இருக்க முடியாது. அதுபோன்ற சாத்தியமான எதையும் மாலத்தீவு செய்யாது” என்று




கூறியிருந்தார்.

எனினும், மாலத்தீவில் இந்தியப் படைகள் இருப்பது குறித்து அதிக அச்சம் உருவாக்கப்படுவதாக முன்னாள் அதிபர் முகமது சோலி கூறினார்.

### லட்சத்தீவு சர்ச்சை மற்றும் தேசியவாதம்

ஆனால் முய்சு மற்றும் அவரது கட்சியின் நகர்வுகள் ஆரம்பம் முதலே சீனாவின் பக்கம் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு, அவர் துருக்கி மற்றும் அதன் பிறகு சீனாவுக்கும் சென்றதை இதற்குச் சான்றாக முன்வைக்கப்படுகிறது. முன்னதாக, மாலத்தீவின் எந்த புதிய அதிபரும் முதலில் இந்தியாவுக்கு வருவதையே வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

முய்சுவின் வெற்றிக்குப் பிறகு, மாலத்தீவில் இந்திய எதிர்ப்பு மற்றும் சீனாவுக்கு ஆதரவான குரல்கள் அதிகரித்து வருகின்றன. இது நான்கைந்து நாட்களுக்கு முன்பு தொடங்கிய லட்சத்தீவு-மாலத்தீவு சர்ச்சையிலும் காணப்பட்டது.

மாலத்தீவின் ஆதரவாளர்கள் தங்கள் தாய் நாட்டைப் புகழ்ந்து பாராட்டுக்களை வெளிப்படுத்தியபோதும், இந்தியா, இந்திய குடிமக்கள் மற்றும் பிரதமர் நரேந்திர மோடி குறித்தும் ஆட்சேபகரமான கருத்துகளை வெளியிட்டாலும், இந்திய ஆதரவாளர்களும் எந்த நிலையி



லும் பின்வாங்கவில்லை.

இந்தியாவில் உள்ள பல பிரபலங்கள் மாலத்தீவை புறக்கணிக்க வேண்டுகோள் விடுத்தனர். கருத்துகள் கூறப்பட்ட விதத்தை ஆராய்ந்தால், அவர்கள் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் அதிகாரப்பூர்வமற்ற செய்தித் தொடர்பாளராகிவிட்டார்கள் என்பது போல் தோன்றியது.

லட்சத்தீவு சர்ச்சைக்குப் பிறகு, பெரிய இந்திய பயண நிறுவனமான ‘ஈஸ் மை ட்ரிப்” இன் தலைமை நிர்வாக அதிகாரி பிரசாந்த் பிட்டி, தனது நிறுவனம் மாலத்தீவுக்கான முன்பதிவை நிறுத்திவிட்டதாகக் கூறினார். அவரைப் பொறுத்தவரை, தேசியவாதம் என்பது எந்த ஒரு “தனிப்பட்ட நன்மைக்கும்” மேலானது.

ஏஎன்ஐ செய்தி நிறுவனத்திடம் பேசியபோது, தனது நிறுவனத்தின் மாலத்தீவு முன்பதிவு ரத்து செய்யப்பட்டது குறித்து தெரிவித்த அவர், லட்சத்தீவு மற்றும் அயோத்தி போன்ற இடங்கள் சர்வதேச சுற்றுலாத் தலங்களாக உருவாக வேண்டும் என்று விரும்புவதாகக் கூறினார்.



பாலிவுட் சூப்பர் ஸ்டார் அக்ஷய் குமார் தனது எக்ஸ் பதிவில், ‘நம்முடைய அண்டை வீட்டாரிடம் நல்ல அணுகுமுறை உள்ளது. ஆனால் எந்த காரணமும் இல்லாமல் வெறுப்பை ஏன் சகித்துக் கொள்ள வேண்டும்? நான் பல முறை மாலத்தீவுக்கு சென்றுள்ளேன். எப்போதும் பாராட்டியிருக்கிறேன். ஆனால் எங்களுக்குக் கண்ணியம் மிக முக்கியமானது” என்று தெரிவித்துள்ளார். இப்போது இந்திய தீவுகளுக்குச் சென்று நம் நாட்டின் சுற்றுலாவுக்கு உதவுவோம்,” என எழுதியுள்ளார்.

இந்தக் கருத்துகளுக்குப் பிறகு, இவ்விரு நாடுகளுக்கிடையேயான பரஸ்பர உறவுகள் போன்ற தீவிரமான பிரச்னைகளில் அரசாங்கங்களின் நிலைப்பாடு சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் ஆத்திரமூட்டும் கருத்துகளால் பாதிக்கப்படுமா என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

ஊடகச் செய்திகளின்படி, சமூக ஊடகங்களில் இந்தியா மற்றும் நரேந்திர மோடி குறித்து ஆட்சேபனைக்குரிய கருத்துக்களை தெரிவித்த அமைச்சர்களை மாலத்தீவு அரசாங்கம் இடைநீக்கம் செய்துள்ளது, ஆனால் இந்திய அரசாங்கம் மாலத்தீவு தூதரை வரவழைத்து ஆட்சேபனை தெரிவித்ததை அடுத்து, இதுபோன்ற இரண்டு கருத்துகள் குறித்து கேள்விகள் எழுப்பப்படுகின்றன. நாடுகளுக்கு இடையிலான உறவுகள் தொடர்பான விவாதங்களை சமூக ஊடகங்கள் தீர்மானிக்குமா என்று கேட்குமளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

### சமூக ஊடகங்களில் வெளியுறவுக் கொள்கை பற்றி விவாதிப்பது எவ்வளவு பொருத்தமானது?

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் தொடர்பாக சமூக ஊடகங்களில் தேசியவாதத்தின் இத்தகைய குரல் வெளிப்பாட்டின் ஆபத்துகள் என்னவாக இருக்கும்?

ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தின் அமைதி மற்றும் மோதல் தீர்வுக்கான நெல்சன் மண்டேலா மையத்தின் உதவிப் பேராசிரியர் பிரேமானந்த் மிஸ்ரா கூறும்போது, “மாலத்தீவின் மூன்று துணை அமைச்சர்களின் தவறு என்னவென்றால், அவர்கள் பிரபலமான அரசியல் கதையை மாலத்தீவின் அதிகாரப்பூர்வ நிலைப்பாடாக மாற்றியது உங்களுக்கு நினைவிருக்கலாம். நூபுர் ஷர்மா அமைச்சர் இல்லை. அவர் பாஜகவின் செய்தித் தொடர்பாளர். ஆனால் அவரது ஒரு கருத்து இந்தியாவை மிகவும் சிக்கலில் ஆழ்த்தியது,” என்றார்.

சித்தாந்தத்தின் அடிப்படையில் வெளியுறவுக் கொள்கையை இயக்க முடியாது என்று பிரேமானந்த் மிஸ்ரா நம்புகிறார். இந்தியா போன்ற பெரும் வல்லரசுகளால் இத்தகைய வெளியுறவுக் கொள்கையை உருவாக்கி அதன் மூலம் செயல்பட முடியாது என்றும் அவர் கருதுகிறார்.

தொடர்ந்து பேசிய அவர், “மாலத்தீவில் இந்தியாவுக்கான இடத்தைப் பெறும் வாய்ப்புக்கள் வற்றிவிடாமல் இருக்க, மாலத்தீவு தொடர்பாக எழும் உணர்வுகளை இந்திய அரசு விரைவில் கட்டுப்படுத்த வேண்டும்,” என்கிறார்.



“சமூக ஊடகங்களில் சில நேரங்களில் பெரும் தீவிர விவாதம் நடக்கிறது. சில நேரங்களில் அது ஆழமற்றது. எனவே, ஆழமற்ற சித்தாந்தத்தின் தாக்கத்தால், தேசியவாதத்தை எந்த நாடும் மற்றொன்றை விட கொடுமையாக பார்க்கும் அளவிற்கு கொண்டு செல்லக்கூடாது. இந்தியா ஒரு முதிர்ந்த ராஜதந்திரம் மிக்க நாடாக சிலவற்றை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.”

### “சமூக ஊடகங்களை புறக்கணிக்க முடியாது”

பேராசிரியர் பிரேமானந்த் மிஸ்ரா பேசியபோது, “இந்த விவகாரத்தில் மாலத்தீவு நடவடிக்கை எடுத்துள்ளது, இந்தியாவும் தனது தூதரை அழைத்து தனது கருத்தை முன்வைத்துள்ளது. இப்போது இந்தியா இந்த விஷயத்தை இதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும்,” என்றார்.

(16ம் பக்கம் பார்க்க)

# திருகோணமலையின் மீதான இந்தியாவின் ஈடுபாட்டை புரிந்துகொள்ளுதல்!



யதீந்திரா

இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான மூலோபாய பனிப்போர் தீவிரமடைந்து வருகின்றது. மாலைதீவு விவகாரம் இதற்கு வெள்ளிடைமலை. பொருளாதார தேவைகளை கருத்தில்கொண்டு, இந்தியாவின் அயல்நாடுகளிற்குள், அதன் செல்வாக்கை அதிகரிப்பதில் சீனா தீவிரம் காண்பித்து வருகின்றது. இலங்கையின் வடக்கு கிழக்கின் மீதான சீனாவின் ஈடுபாட்டை இந்த அடிப்படையில்தான் நோக்க வேண்டும். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் திருகோணமலை திட்டங்கள் முக்கியத்துவம் பெறுகின்றது.

திருகோணமலையின் மீதான இந்தியாவின் ஆர்வம் புதிய விடயமல்ல. இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் தொடர்பில் நீண்டகாலமாக பேசப்பட்டு வருகின்றது. இலங்கையின் அரசியலில் காணப்படும் குழப்பங்களாலும், இலங்கை ஆட்சியாளர்களின் உறுதியற்ற வெளிவிவகார கொள்கையினாலும், திருகோணமலை திட்டங்கள் எதிர்பார்த்தவாறு முன்னெடுக்கப்படவில்லை. 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி, திருகோணமலை எண்ணைக் குதங்களை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு இந்தியா வசமானது. எனினும் பிரேமதாச - பிரபாகரன் இந்திய எதிர்ப்பு உடன்பாட்டை தொடர்ந்து, நிலைமைகள் ஒரு இரவில் மாறின. இந்திய படைகள் வெளியேற்றத்தை தொடர்ந்து, இந்தியாவின் திட்டங்கள் அனைத்தும் உறைநிலைக்குச் சென்றன.

பின்னர், விடுதலைப் புலிகளுக்கும் ரணில் அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதான ஒப்பந்த காலத்தில் தான் (2003), இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இணக்கம்காணப்பட்ட விடயங்கள் மீளவும் மேசைக்கு வந்தன. திருகோணமலையின் எண்ணை குதங்கள், 35 வருட குத்தகைக்கு இந்தியாவிடம் ஒப்படைக்கப்படுவதற்கான உடன்பாடு எட்டப்பட்டது. ஆனால் 2015 வரையில், இந்திய எண்ணை கூட்டுத்தாபனம் திருகோணமலையில் செயற்பாடுகளை மேற்கொள்ளவில்லை. ஏனெனில் - 2003இல் இணக்கம்காணப்பட்ட உடன்பாட்டின், சட்டரீதியான தகுதி தொடர்பில், இந்திய எதிர்ப்பு தேசியவாத குழுக்கள் நெருக்கடிகளை ஏற்படுத்தியதால், விடயங்களை முன்னெடுக்க முடியாமல் இருந்தது.



2015இல், ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை தொடர்ந்து, இந்திய பிரதமர் நரேந்திர மோடி, வரலாற்று விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். 28 வருடங்களுக்கு பின்னர் ஒரு இந்திய பிரதமர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். 1987இல் ரஜீவ்காந்தியின் விஜயம் இடம்பெற்றது. மைத்திரிபால சிறிசேனவுடனான சந்திப்பின் பின்னர், திருகோணமலையை ஒரு பிராந்திய பெற்றோலிய மையமாக மாற்றும் திட்டத்திற்கு உதவுவதற்கு இந்தியா தயாராக இருப்பதாக மோடி அறிவித்தார் - அதே வேளை, திருகோணமலையின், சம்பூரில் மின்நிலையத்தை நிறுவும் திட்டத்தையும் முன்னெடுப்பதாகவும், அது இலங்கையின் மின்சக்தி தேவையை நிவர்த்திசெய்யும் பிரதான திட்டமாக இருக்கும் என்றும் மோடி அறிவித்தார்.

2022இல், திருகோணமலை எண்ணை குதங்களை அவிருத்தி செய்வதற்கான பிறிதொரு உடன்பாடு செய்யப்பட்டது. கோட்டபாயவின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து, அதிகாரத்தை பொறுப்பேற்ற ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையை ஒரு எரிசக்தி மையமாக மாற்றவுள்ளதாக அறிவித்தார்.

2023, பெப்ரவரியில், புதுடில்லிக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த, ரணில் விக்கிரமசிங்க, இந்திய திட்டங்களை முன்னெடுப்பதற்கான தயார் நிலையை வெளிப்படுத்தினார். இந்தியாவுடன் இணைந்து, திருகோணமலையை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களை அறிவித்தார். இதன்போது, தென்னிந்தியாவிற்கும் திருகோணமலைக்கும் இடையிலான எண்ணைக் குழாய் பொருத்தும் திட்டம் தொடர்பிலும் இணக்கம் காணப்பட்டது. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைக்கும் திட்டத்தையும் ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்தினார்.

திருகோணமலை திட்டங்கள் தொடர்பில் இவ்வாறான அறிவிப்புக்கள் வெளியான போதிலும் கூட, இலங்கையின் அரசியலில் அவ்வப்போது ஏற்படும் ஏற்ற - இறக்கங்களால், திட்டங்களை முன்னெடுப்பதில் முட்டுக்கட்டைகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. சீன சார்ப்பு குழுக்கள் தொடர்ந்தும் இந்திய திட்டங்களுக்கு எதிரான போலியான பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

திருகோணமலை பற்றி, நெப்போலியனின் பிரபலமான கூற்று ஒன்றுண்டு. அதாவது - "திருகோணமலையை எவர் கட்டுப்படுத்துகின்றாரோ அவர் இந்து சமுத்திர பிராந்தியத்தை கட்டுப்படுத்துவார்". 18ஆம் நூற்றாண்டில், பிரித்தானிய பிரதமராக இருந்த, வில்லியம் பிட் த ஜங்கர், திருகோணமலை பற்றி குறிப்பிடும் போது, "காலனித்துவ உலகின் மிகவும் பெறுமதியான சொத்து" என்று குறிப்பிட்டார். திருகோணமலையின் மூலோபாய முக்கியத்துவத்தை புரிந்து கொள்வதற்கு இந்தக் கூற்றுக்கள் போதுமானது.

1980களில் மேற்குலகின் கொள்கை திட்டமிடல் சமூகத்தினர் மத்தியில், திருகோணமலை அதிக கவனத்தை பெற்றது. இந்தக் காலத்தில், திருகோணமலை துறைமுகத்தை அமெரிக்க கடற்படைக்கு வழங்கப் போவதான கதையொன்றும் பரவியிருந்தது. அது பனிப்போர் காலம். இந்தியா அப்போது சோவியத் சார்பு நிலையில் இருந்தது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், இந்திராகாந்தி நிர்வாகம் அப்போதைய ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிர்வாகம் தொடர்பில் சந்தேகம் கொண்டது.

மறுபுறமாக இலங்கையின் உள்ளக அரசியலில் புதிய நெருக்கடிகள் ஆரம்பித்தது. தமிழர்களின் ஜனநாயக கோரிக்கைகள், ஆயுதப் போராட்டமாக வெளித்தெரியத் தொடங்கியது. தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு




ஆயுதப் போராட்ட குழுக்கள் வளர்சியடைந்து கொண்டிருந்த காலம். அன்றைய சூழலில், ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் அனைத்துமே தமிழ் நாட்டைத்தான், பின்தளமாக பயன்படுத்திக் கொண்டிருந்தன. தமிழ் நாட்டு அரசியல் கட்சிகள் ஆயுத நடவடிக்கைகளுக்கு உதவியளித்தன. இலங்கையின் உள்விவகாரம் முதல் முதலாக, தென்னிந்தியாவிற்குள் தாக்கங்களை ஏற்படுத்தியது. நிலைமைகள் சிக்கலடைந்ததை தொடர்ந்து, இலங்கையின் உள் விவகாரங்களில் தொடர்ந்தும் எட்டி நிற்க முடியாதென்னும் சூழலில்தான், இந்தியாவின் நேரடியான தலையீடு நிகழ்ந்தது. இதன் விளைவாகவே இந்திய -இலங்கை ஒப்பந்தம் உருவானது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு இரண்டு இலக்குகள் இருந்தன - ஒன்று, வடக்கு கிழக்கை தாயகமாகக் கொண்டு வாழும் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு நியாயமானதொரு தீர்வை காண்பது - இரண்டு, இலங்கையின் உள்ளக அரசியல் மோதல்கள் இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைவதை தடுப்பது. இந்த அடிப்படையில்தான், இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில், மேற்படி இரண்டு விடயங்களும் உள்வாங்கப்பட்டன.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் குறிப்பிடுவதனால், தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டு, திருகோணமலை விடயங்களில் தலையீடு செய்யும் உரித்து இந்தியாவிற்குண்டு. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு, ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவிற்கும் இந்திய பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் பரிமாறப்பட்ட கடிதங்களின் அடிப்படையில், திருகோணமலை துறைமுகம் மற்றும் ஏனைய எந்தவொரு துறைமுகங்களும் இந்தியாவின் பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படுத்தும் நோக்கில் இராணுவ நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படக் கூடாது. இதன் உள்ளடக்கம் என்னவென்றால் அவ்வாறான சூழ்நிலை ஏற்பட்டால், அதற்கான ராஜதந்திர நகர்வுகள் தோல்வியடையும் பட்சத்தில் இந்தியா இராணுவரீதியான தலையீடுகளை கருத்தில்கொள்ள முடியும். அதே வேளை இரண்டு தலைவர்களுக்கும் இடையில் பரிமாறப்பட்ட கடிதங்களின் அடிப்படையில் திருகோணமலையின் அபிவிருத்தியிலும் இந்தியாவிற்கு முதன்மையான பங்குண்டு.

இந்திய கொள்கை திட்டமிடல் சமூகத்தை பொறுத்தவரையில், இந்திய வரலாற்றியலாளரும், ராஜதந்திரியுமான, கே.எம். பணிக்கரே, முதல் முதலாக திருகோணமலையின் முக்கியத்துவம் தொடர்பில் பேசியவர். அவர் 1940இல் எழுதிய, இந்தியாவும் இந்து சமுத்திரமும் (**India and the Indian Ocean: an essay on the influence of sea power on Indian history**) என்னும் நூலில்தான், இந்த விடயங்களை சுட்டிக்காட்டியிருக்கின்றார் - அதாவது, கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்கள் இந்தியாவின் பாதுகாப்பிற்கு இன்றியமையதவை. அம்பாந்தோட்டை துறைமுகம் முற்றிலும் சீனாவின்



வசமாகியிருக்கும் நிலையில், இந்தியாவினால் விட்டுக் கொடுக்கப்படவே முடியாத, ஒரு மூலோபாய சொத்தாகவே திருகோணமலை இருக்கின்றது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும் முயற்சியில் ஈடுபட்டுவரும் பின்னணியில் இந்தியாவின் திருகோணமலை திட்டங்கள் இன்றியமையாதவை. இந்தியாவின் திருகோணமலை திட்டங்கள், இலங்கையின் பொருளாதார வளர்சியில் பிரதான பங்குவகிக்கும். திருகோணமலையில் இந்தியாவின் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டால், அதனால், மக்கள் தங்களின் நிலங்களை இழக்க வேண்டிவரும் என்றவாறான போலியான கதைகளை சீன சார்பு தேசியவாத குழுக்கள் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டன.

மகிந்த ராஜபக்சவின் ஊழல் நிர்வாகத்தை சீனா மிகவும் தந்திரமாக பயன்படுத்திக்கொண்டது. மகிந்தவின் ஒரேயொரு நோக்கம், தங்களுடைய குடும்ப அதிகாரத்தை பாதுகாப்பது மட்டும்தான், என்பதை புரிந்துகொண்ட சீனாவிற்கோ, ராஜபக்சக்களை கையாள்வது மிகவும் இலகுவாக இருந்தது. சர்வாதிகார பண்புள்ள ஆட்சியாளர்கள்தான், சீனாவின் விஸ்தரிப்புவாத இலக்கிற்கான முதலீடு. அவர்களை தங்கள் வசப்படுத்துவதன் ஊடாக, அதன் நீண்டகால இலக்கிற்கான அடித்தளங்களை சீனா போட்டுக் கொள்கின்றது. ஒரு பிரித்தானிய அரசியல் வாதி குறிப்பிட்டது போன்று, "சீனா முதலில் மேசையில் பணத்தையே காண்பிக்கின்றது. இதனால்தான் சீனாவினால் வேகமாக சிறிய நாடுகளை வளைக்க முடிகின்றது, ஆனால் நாங்கள்?" என்கின்றார் அந்த அரசயல் வாதி. சீனாவின் வேகத்திற்கு ஏற்ப, அதன் வியூகங்களை எதிர்கொள்வதில், இந்திய மேற்குல அணுகுமுறையின் வேகம் போதாது என்பதே, பல ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கின்றது.

சீனாவின் வெளிவிவகார கொள்கையில் நாடுகளின் ஜனநாயகம் மற்றும் மனித உரிமை விவகாரங்களுக்கு எந்தவொரு இடமும் இல்லை. உள் விவகாரங்களில் தலையிடாக் கொள்கை என்பதை இவைகள் எல்லாம் ஒரு விடயமே இல்லை. பணத்தை காண்பித்து, நாடுகளின் இறைமையை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே சீனாவின் தந்திரம். அதாவது, யுத்தமில்லாமல் வெல்லுவது.

இந்தப் பின்புலத்தில் இலங்கைத் தீவை யுத்தமில்லாமல் வெல்லும் நகர்வுகளை சீனா எப்போதோ ஆரம்பித்துவிட்டது. இலங்கையின் இறைமையை சீனா நிலத்திலும் கடலிலும் மீறிவருகின்றது என்று, 2020இல் இலங்கைக்கு விஜயம் செய்த, அமெரிக்க ராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ கூறினார். இந்தியாவின் திட்டங்கள் அவ்வாறு பறிபோன இறைமையை பாதுகாக்கும், மீட்டெடுக்கும் திட்டங்களாகவே அமையும். வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் தேசிய அரசியல் தரப்புக்களும் மற்றும் புத்திஜீவிகள், சிவில் சமூக குழுக்கள் என்போரும், இதனை ஆழமாக புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

# லட்சத் தீவு - மாலைதீவு பிரச்னை:...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பினும், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை குறித்து சமூக ஊடகங்கள் விவாதம் செய்வதை நிறுத்த முடியாது என்று வெளியுறவுக் கொள்கையை அறிந்த சில நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் சீன ஆய்வு மையத்தின் இணைப் பேராசிரியர் அரவிந்த் யெல்லேரி கூறும்போது, “இந்தியாவுடன் மிக நெருங்கிய தொடர்புடைய நாடு என்பதால், மாலத்தீவு குறித்து இந்திய சமூக ஊடகங்களில் கடுமையான எதிர்வினை இருந்தது. ஏராளமான இந்திய சுற்றுலாப் பயணிகள் அங்கு செல்கின்றனர். இது மாலத்தீவை பிரபலமாக்குகிறது. அந்நாட்டுக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது. ஆனால் சமூக ஊடக பயனர்களும் மாலத்தீவின் அமைச்சர்களும் இந்தியா மற்றும் அதன் பிரதமர் மீது ஆட்சேபனைக்குரிய கருத்துக்களை தெரிவித்ததால், மக்கள் கோபமடைந்துள்ளனர்,” என்றார்.

“சமூக ஊடகங்களில் இதுபோன்ற விவாதங்கள் இந்திய வெளியுறவுக் கொள்கையை பலவீனப்படுத்தும் என்று சொல்வது தவறானது. இதுபோன்ற விவாதங்கள் நடக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன்.”

தொடர்ந்து பேசிய அரவிந்த் யெல்லேரி, ‘சமூக ஊடகங்களில் எழுதுபவர்கள் அல்லது விவாதங்களை நடத்துபவர்கள் பொதுவாக நல்ல பின்னணி கொண்டவர்கள் மற்றும் தீவிர விவாதங்களை நடத்தக்கூடியவர்களாக இருக்கின்றனர். ஆனால் ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கை என்னவாக இருக்க வேண்டும் என்பதை சமூக ஊடகங்கள் தீர்மானிக்க முடியாது என்பதும் முக்கியம்,” என்றார்.

**மாலத்தீவில் இந்தியாவுக்கு எதிரான அணுகுமுறை அதிகரித்து வருகிறதா?**

இருப்பினும், டெல்லி ஷஹீத் பகத் சிங் கல்லூரியின் உதவிப் பேராசிரியரும், கிழக்கு ஆசிய விவகாரங்களில் நிபுணருமான ரித்யுஷா திவாரி இது குறித்துப் பேசிய போது, ‘இந்த வகையான தீவிர தேசியவாதம் அரசியல் பிரச்சனைகளை உருவாக்கலாம். இது உள்நாட்டு அரசியலுடன் தொடர்புபடுத்தப்படலாம் என்பதுடன் எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்தும். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் தாக்கம் ஏற்படுத்தும் இந்த போக்கு உறவுகளை எதிர்மறையாக பாதிக்கலாம்,”



என்றார்.

வரும் நாட்களில் இந்தியாவில் தேர்தல் நடைபெற உள்ளதால், அரசியலில் இதுபோன்ற எதிர்வினைகளை காணலாம் என்று ரித்யுஷா திவாரி கூறுகிறார். மேலும் அதை சாதகமாக்கிக் கொள்ளும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படலாம் என்றும் அவர் கருதுகறார்.

மாலத்தீவில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் இந்தியாவுக்கு ஆதரவாக இருப்பதாக நிபுணர்கள் கூறுகின்றனர். இந்தியாவுக்கு ஆதரவாகச் செயல்படும் எதிர்கட்சி அரசியலுக்கு அங்கே நிறைய இடம் இருக்கிறது.

லட்சத்தீவு-மாலத்தீவு பிரச்னையில் இந்தியாவுக்கும், பிரதமர் நரேந்திர மோடிக்கும் எதிராக கருத்து தெரிவித்த பிறகு, இந்தியாவுக்கு ஆதரவாக பிரபலங்களும், எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் முன்வந்த விதம் இதை நிரூபித்துள்ளது.

இந்தியாவுக்கு எதிரான இதுபோன்ற கருத்துக்களை ஏற்க முடியாது என்று மாலத்தீவு வெளியுறவு அமைச்சர் மூசா ஜமீர் தெரிவித்துள்ளார். இது மாலத்தீவு அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு அல்ல என்றும் அவர் கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான பல ஆண்டுகால நட்புறவில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் இதுபோன்ற உணர்ச்சியற்ற கருத்துகளை அனுமதிக்கக் கூடாது என்று முன்னாள் அதிபர் இப்ராகிம் சோலி கூறினார். சோலி மாலத்தீவு அதிபராக இருந்தபோது இந்தியாவுக்கும் மாலத்தீவுக்கும் இடையிலான உறவுகள் நெருக்கமாக இருந்தன.

மாலத்தீவின் வேறு சில தலைவர்களும் இந்தியா பற்றி கூறிய கருத்துகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

மாலத்தீவு முன்னாள் வெளியுறவு அமைச்சர் அப்துல்லா ஷாஹித் கூறுகையில், “பொதுமக்களுக்காகப் பணியாற்றும் பதவிகளில் இருப்பவர்கள் ஒழுக்கத்தை கடைபிடிக்க வேண்டும். சமூக ஊடக செயல்பாடு இனி இருக்காது என்பதை அவர்கள் உறுதிப்படுத்தவேண்டும். நாட்டின் நலன்களைப் பாதுகாக்கும் பொறுப்பை மக்கள் ஏற்க வேண்டும்,” என்றார்.

மாலத்தீவின் மற்றொரு முன்னாள் அதிபரான முகமது நஷீத், மாலத்தீவின் பாதுகாப்பு மற்றும் செழுமைக்கு முக்கிய பங்காற்றும் ஒரு முக்கிய நட்பு நாட்டிடம் எப்போதும் நல்ல உறவைக் கடைபிடிக்கவேண்டும் என்றும், இதுபோன்ற போக்கை முய்சுவின் அரசாங்கம் தவிர்க்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

மாலத்தீவில் இந்தியாவுக்கு கிடைத்து வரும் இந்த ஆதரவை நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். மாலத்தீவுக்கு எதிராக இந்தியா ஒரு வலுவான நடவடிக்கையை எடுக்கக்கூடாது என்று அவர்கள் கூறுகின்றனர். இந்திய ஆதரவு நிலையில் இருக்கும் மக்கள் கூட தங்கள் நிலைப்பாட்டை சிந்திக்க வேண்டும். மாபெரும் சக்தியாக இருக்கும் இந்தியா, தனது முதிர்ச்சியைக் காட்டி, இந்த விஷயத்தை இங்கே நிறுத்தினால் நல்லது.

